# தொடர்பியல் சிந்தனைகள்

அருட்திரு அரச. ஐயாத்துரை

வானொலி, தொலைக்காட்சி, அச்சு,
ஊடகஇயல் துறையினருக்கான
படைப்பு

Bel



வெளியீடு:
விக்னேஸ் பிரசுரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தொடர்பியல் சிந்தனைகள்

# Communication Concepts

C. M. C.
PUB LIC LIBRARY

**Rev. Arasa.Iyadurai** Dip.in Journalism (Col)
Dip.in Miss. (S.Korea) Dip.in,CEF. (Bombay), Tr.T.Cer.

Media Consultant, NIE.
Ex.Director-Education Service, (S.L.B.C)
Aux. Minister at

**Methodist Memorial Church,**
4, Moors Road, Colombo - 6.
Chairman: **HOMSALANKA.**

**'WINNERS'**
**No. 30, Nihal Silva Mawatha,**
**Kirulapone, Colombo 06,**
**Shri Lanka.**
**2000**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

First Published by Winners'
30, Nihal Silva Mawatha,
Kirulapona, Colombo 06.
Shri Lanka

**இலங்கைத் தேசிய நூலகம் - வெளியீடுகளில் உள்ள பட்டியற் தரவு**

ஐயாத்துரை, அருட்திரு அரசரத்தினம்
தொடர்பியல் சிந்தனைகள்/அருட்திரு அரசரத்தினம்
ஐயாத்துரை, கொழும்பு: வின்னர்ஸ் பப்ளிகேஷன்ஸ்,
2000
ப. 72: ச.மீ.18

ISBN 955-96225-3-6 விலை: ரூ 150.00
i. 302.23 டி.டி.சி 21 ii. தலைப்பு
1. பல்தொடர்பு ஊடகம் 2. தொடர்பாடல்
3. ஒலிபரப்பு

302.23
40178
32895

All rights reserved

**ஆசிரியர் வெளியிட்டுள்ள வேறு நூல்கள்**

1. Excellence in Leadership & Management - 2000
2. The Role of the Producer in Educational Broadcasting 1999
3. ஒருவரோடு ஒருவர் உண்டு பண்ணும் சீஷத்துவ பயிற்சி நெறி 1999 (மொழிபெயர்ப்பு)
4. அற்புதங்களுக்குக் காரணம் விசுவாசமே 1998 (மொழிபெயர்ப்பு)
5. வானொலியில் கல்வி ஒலிபரப்பு - 1997
6. காலத்தைக் கடந்து வந்த கதைகள் 1997
7. சபை வளர்ச்சிக்கு உகந்த தேவ ஊழியம் - 1996 (மொழிபெயர்ப்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயவுசெய்து நூலைச்
சுத்தமாக வைத்திருக்கவும்
அடையாளங்கள் ஏற்படுத்த
வேண்டாம்

## This Book

Is printed through the patronage and sponsorship of the National Library and Documentation Services Board. It should be noted that the contents of this book do not reflect the views of the National Library and Documentation Services Board.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

பலகால அனுபவங்களை அடக்கி வைப்பது தேசத்துக்கும், மக்களுக்கும் செய்யும் துரோகமாகும், என்னும் " எண்ணக் கருவால்" தூண்டப்பட்டவனாகி, யான் அறிந்த கலைகளை மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு யாவரும் அறிவு வெளிச்சத்தைப் பெற்று உலகத்தில் பிரகாசிக்க வேண்டும் என்பதே இந் நூலை எழுதக் காரணமாகும். ஊர், கிராமம், பட்டணம், நகரம், தேசம், நாடு, உலகம் என்றெல்லாம் நாம் வாழும் பூமி கூறுபோடப்பட்டிருப்பினும், அதில் வாழ்பவர்கள் யாவரும் ஆண்டவன் படைப்பில் மனித இனமே! மனித இனம் " மெய்ப் பொருளைக் காண" அறிவு மிக முக்கியம். அறிவோடு ஞானத்தையும் பெறும்போது ஆண்டவனையே அடைந்து விடுவோம். இந்த நல்நோக்கோடு எழுந்ததே இச் சிறிய நூல்- " தொடர்பியல் சிந்தனைகள் "

அனுபவத்துக்கூடாக ஆசிரிய உலகத்தில், ஒலி, ஒளிபரப்புத் துறையில், எழுத்துத் துறையில், சபைப் போதகராக இருந்து மக்கள் மத்தியில் பெற்ற அனுபவங்கள் யாவற்றையும் உணர்ந்தவனாக இப்படியான ஒரு சிறுநூல் மக்களைத் தூண்டி மறுமலர்ச்சிமிக்க மக்களாக வாழ வழிவகுக்கும் என்னும் நல்ல எண்ணத்தோடு இதைப் பிரசுரிக்க முனைந்தேன். நான் எடுத்துக் கொண்ட ஒவ்வொரு துறையும் மிகவும் ஆழ்ந்த, அகண்ட துறைகள். தொகுதி ரீதியாக ஆராய்ச்சிகள் செய்து வெளியிடக் கூடியவை. ஆயின் அவை ஆராய்ச்சி நூல்களாக அமையுமே தவிர வேறு சாதாரண மக்களை வந்து கிட்டிவிட முடியாது. ஆகவே பெற்ற அறிவைச் சுருக்கி ஒரு இரு பக்கங்களில் செப்பமாகத் தர முனைந்துள்ளேன். காலத்தோடு ஒட்டிய தலைப்புகளையே தெரிந்தெடுத்துள்ளேன். இவை யாவும் எனது தொழிலோடு சம்பந்தப்பட்டு, அந்தந்தக் காலங்களில் பயிற்சிநெறிகளிலும், பத்திரிகைகளிலும் வழங்கப்பட்டுப் பிரசுரமானவை.

இதை எழுதுவதற்கு எனக்கு ஒத்தாசையாக இருந்த தேவனுக்கும், தேவ பிள்ளைகளாக இருந்து உதவிய எனது குடும்பத்தினர், மனைவி றோஸ் கிருபா சுகிர்தம், மகள்மார் கிறேஸ் அரசகலாதேவி, குளோறியா ஜெயசெல்வி; மகன்மார் டேவிட் பவளராஜ், மோசஸ் தேவரூபன் ஆகியோருக்கும், இலங்கைத் தேசிய நூலக சேவை உத்தியோகத்தர்களுக்கும், மற்றும் இதை உடனுக்குடன் அச்சேற்றி அற்புதமாய்ப் படைத்தெடுக்க உதவிய எனது நண்பர் திரு.ஏ. சிவராஜா அவர்களுக்கும், மறைமுகமாக நின்று உதவிய செல்வி. சற்சொரூபவதி நாதன், தினகரன், வீரகேசரி, சிந்தாமணி பத்திரிகை நிர்வாகத்தினருக்கும் மனம் உவந்து முன்னுரை தந்து ஊக்குவித்த திரு இராஜ சிறிகாந்தன் (பிரதம ஆசிரியர் தினகரன்) அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த நூலை எனது அன்பு மனைவி **றோஸ்** அவர்களுக்கு அர்ப்பணிப்பதில் பெரிதும் அகமகிழ்கிறேன்.

24, 24/2, றோகினி வீதி,
கொழும்பு.06
தொலைபேசி 580273
*01.01.1999*

ஆசிரியர்
அருட்திரு அரச. ஐயாத்துரை
(தொடர்பியல் வித்தகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தொடர்பாடற் புரட்சியின் இன்றைய சகாப்தத்தில் வெகுஜன ஊடகங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கையில் வேறுபடுத்தி நோக்கமுடியாதவாறு இரண்டறக் கலந்துள்ள அம்சங்களாகி விட்டன. குழந்தைகள் முதற்கொண்டு முதியோர் வரை இவற்றின் நேரடியான அல்லது மறைமுகமான தாக்கத்திற்குட்படாதவர்கள் எவருமே இல்லையெனக் கூறுமளவிற்கு இவற்றின் செல்வாக்கு வியாபிதம் பெற்றுள்ளது. எனவே சீரிய சமூதாயமொன்றின் உருவாக்கத்தில் வெகுஜன ஊடகவியலாளர்களின் பங்கும் பணியும் முன்னைய காலத்தைவிட இன்று முக்கியத்துவமிக்கவையாக உள்ளன.

ஆரோக்கியமான சிந்தனைகளும் சமூகப் பொறுப்புணர்ச்சியும் கொண்ட வெகுஜன ஊடகவியலாளர்களால் மட்டுமே சீரிய சமுதாயமொன்றினை உருவாக்க முடியும். எனவே சமூகப் பொறுப்புணர்வுமிக்க ஊடகவியலாளர்களை உருவாக்குவது ஒரு தேசியக் கடமையாகிறது. தமிழ் மொழியறிவினை மட்டுமே கொண்டுள்ள ஊடகவியலாளர்களுக்கும், ஊடகவியலை முறைசாரக் கற்றறிபவர்களுக்கும் உதவும் நூல்கள் தமிழில் மிக அரிதாகவே உள்ளன.

"**தொடர்பியல் சிந்தனைகள்**" என்ற இந்நூல் இத்துறையில் புலமையும் நீண்டகாலப் பட்டறிவும் உள்ள ஊடக முதுவர் அரச. ஐயாத்துரை அவர்களினால் எழுதப்பட்டுள்ளது. கல்வித்துறை அத்தியாயத்துடன் ஆரம்பிக்கும் இந்நூல் ஒலி ஊடகத்துறை பற்றி விரிவான தகவல்களைக் கூறி; போதைப்பொருட்கள். இவற்றின் பாவனையைத் தடுப்பதில் ஊடகங்களின் பங்கு என்பவை பற்றி எடுத்துரைத்து; ஊக்க எழுச்சி, பேருரையாற்றல், நூலாக்கம் என்பவை பற்றிக் குறிப்பிட்டு; "ஜேனலிசம்" என்றாலென்ன? எனக்கூறி தலையாய செய்தி ஸ்தாபனங்கள் பற்றிய பட்டியலுடன் பூரணத்துவம் பெறுகிறது.

நூலாசிரியர் ஒலி ஊடகத்துறையில் நீண்ட காலம் பணியாற்றியவராதலால் இத்துறை பற்றி இந்நூலில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது. ஊடகத்துறையில் விரிவானதொரு நூலை எழுதுவதற்கு ஆதாரமாக உதவக்கூடிய இந்நூல் ஊடகவியலாளர்களுக்கும், இத்துறையில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் மிகுந்த பயனைத் தரத்தக்க சிறந்த கைநூலாகும்.

லேக் ஹவுஸ்
கொழும்பு. 10
25.02.1999

ராஜ ஸ்ரீகாந்தன்
**பிரதம ஆசிரியர் - தினகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


1. அறிவுக்கு வித்திடும் ஆசிரியர் உலகம் .................................. 1
2. வானொலி மூலம் மொழிவிருத்தி - கேட்டல் ................. 7
3. வானொலி மூலம் மொழிவிருத்தி - வாசிப்பு ................. 13
4. வானொலி மூலம் மொழி விருத்தி - எழுத்தாற்றல் .... 18
5. வானொலிப் பேச்சில் காணப்பட வேண்டிய குணாதிசயங்கள்........................................................................ 21
6. விளையாட்டு மூலம் மொழி கற்பித்தல் ................................. 24
7. உலகோருக்குள்ளே உந்துவிசையின் உத்வேகங்கள் ...... 29
8. ஒரு தொடர்பியலாளர் - உந்துவிசையாளரில் காணப்பட வேண்டிய பண்புகள் ........................................................ 39
9. ஒலியின் விநோதங்கள் ........................................................ 36
10. ஒலி மூலம் மொழி ........................................................................ 37
11. ஒரு அறிவிப்பாளரின் பண்புகள் ........................................ 39
12. சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதைப் பொருட்கள் .................................................... 41
13. போதைப்பொருள் தடைபற்றிய விளக்கம் ................................ 44
14. போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதில் தொடர்பு சாதனங்களின் பங்கு ............................................................ 46
15. ஊக்களழிற்சி உள்ளவரில் காணும் ஆறு இலட்சணங்கள் 48
16. பேருரையாற்றத் தேவையான தத்துவங்கள் ................................50
17. நவீன நூலை ஆக்கி எடுக்க மரபுவழிவந்த உத்திகள்............ 52
18. தொடர்பியல்துறையில் அபிவிருத்தி ...................................... 55
19. "ஜேனலிசம்" என்றால் என்ன? ..............................................59
20. உலக செய்தி ஸ்தாபனங்கள் ..................................................63



பொது நூலகம் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# அறிவுக்கு வித்திடும் ஆசிரியர் உலகம்

(Qualities of an ideal teacher)

(சிந்தாமணி பத்திரிகையில் பிரசுரமானது)

## இலக்கு, நோக்கங்களை அடிப்படையாக்கி பாடங்களைத் திட்டமிட வேண்டும்.

எதிர்கால சந்ததியினரின் அறிவுக்கு வித்திடும் ஆசிரியர் உலகம் இலக்கு, நோக்கங்களை அடிப்படையாக வைத்துப் பாடங்களைத் திட்டமிட வேண்டும்.

❖ **இலக்குகள்** (Goals) பொதுவானவை, நீண்ட காலத்தவை என்பதை ஞாபகத்தில் கொள்ளுங்கள்.

❖ **நோக்கங்கள்** (Objectives) மிகவும் திட்டவட்டமானவை. **வேலைகள்** அல்லது **செயல்கள்** (Tasks) மேலும் திட்டவட்டமானவை.

❖ நோக்கங்கள் எப்போதும் தெளிவாகவும், திட்டவட்டமானதாகவும் இருக்க வேண்டும். அவை இயற்கையோடு ஒத்ததாயும், உயிர்த்துடிப்பானதாகவும், பொருத்தமானதாகவும், பூர்த்தி செய்யக்கூடியதாகவும், அடையக்கூடிய தாகவும் இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்துங்கள்.

**நோக்கங்கள்: ஐந்து அம்சங்களைக் கொண்டவை:-**

1. எத்தகைய்யோரை மையமாக வைத்துள்ளீர்கள்?
2. அவர்கள் என்ன செய்ய வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?
3. அவர்கள் என்ன செய்கிறார்கள்?
4. அவர்கள் அதனை எங்கே, எப்போது செய்கிறார்கள்?
5. அவர்கள் அதனை எவ்வளவு சிறப்பாகச் செய்கிறார்கள்? என்னும்

– இந்த அம்சங்கள் இதில் அடங்க வேண்டும்.

❖ உங்களது பாடங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள். ஆசிரியர் எதனைச் சொல்லவேண்டும், எவ்வாறு செயல்படுதல் வேண்டும், கற்போர் எதனைச் சொல்லவேண்டும் என்ற விடயங்கள் யாவும், ஆயத்தமாக இருத்தல் அவசியம். உங்களது அணுகுமுறையில் பூரண அறிவும், அனுபவமும் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவரக்கூடிய முறையில் பாடத்தைச் சமர்ப்பியுங்கள். கற்றல் என்பது விறுவிறுப்பாக இருக்கவேண்டுமேயொழிய ஓய்ந்த செயல்பாடு அன்று. உங்களது ஆளுமை, தொழிலின் ஆர்வத்தையும் தன்னம்பிக்கையையும், சிரத்தையையும் பிரதிபலிக்க வேண்டும்.

- **பயிற்சிக்குரிய** அப்பியாசங்களை அதிகமாகக் கொடுப்பதுடன் ஒழுக்கத்தையும், கவனத்தையும் பேணுங்கள். திறன் என்பது உண்மையில் ஏதாவது செயற்பாட்டைக் குறிக்கின்றது. ஈடுபடுதலே எல்லாக் கற்றலினதும் திறவுகோலாகும். சுறுசுறுப்புடன் இயங்கச் செய்தலே சிறந்த கற்றல் செயற்பாடு ஆகும்.

- பாடத்தை விறுவிறுப்பாகவும், சுவாரசியமாகவும் ஆக்க, முடியுமானவரை பல்வேறு **உபகரணங்களைப்** பயன்படுத்துங்கள்.

- பிள்ளைகள் ஐம்புலன்கள் மூலமாகக் கற்கிறார்கள். இது ஆளுக்காள் வேறுபடுகிறது. இதில் ஏறக்குறைய பார்வை மூலமாக 83 சதவீதமும், கேள்வி மூலமாக 11 சதவீதமும், மணம், சுவை, தொடுதல் என்பன மூலம் 6 சதவீதமும் என ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். கட்புலன் மூலம் பெறும் கல்வி நீண்ட காலம் நிலைக்கும் எனவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- உலகின்கண், வளர்ந்து வரும் எல்லா நவீன பிரபல்ய வெகுசனத் தொடர்பு சாதனங்களின் தொழில் நுட்பங்களையும், வகுப்பறையில் கற்பித்தலுக்கு பிரயோசனப்படுத்துங்கள்.

- சிந்தனையும், விளக்கமும் தெளிவாக இருப்பதுடன் தெளிவான குரலையும் கொண்டிருங்கள்.

- பிள்ளைகளின் சுற்றாடலில் உள்ளவற்றையே உதாரணமாக எடுத்துக் காட்டுங்கள். சுற்றாடலை முன்வைத்துப் பாடத்தைக் கட்டியெழுப்புங்கள்.

- வகுப்பறை துணைகொண்டே பாடத்தை நடத்திச் செல்லுங்கள். ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையில் அதிகளவு இணைப்பு இருக்கத்தக்கதாக முயற்சிகளை ஆக்கிக்கொள்ள வேண்டும்.

- பொருத்தமான இடத்தில் பாடத்தின் நோக்கமும் பாடத்திட்டத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய அம்சங்களும் உரிய இடங்களில் அழுத்தம், திருத்தமாகச் சொல்லப்பட வேண்டும்.

❖ பிள்ளையை மையமாக வைத்தே கற்பியுங்கள். கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள். உந்து சக்தியளிக்கவும், எழுச்சி பெறவும், கவனங் கொள்ளவும் மாணவர்களைத் தூண்டினால் இயல்பாகவே மாணவர்கள் கற்பதற்கு அவை வழிவகுக்கும்.

❖ மாணவர்களது மட்டத்துக்கு இறங்கி வந்து கற்பியுங்கள். உங்களைச் செவிமடுப்போரை அறிந்து கொள்வதுடன், அவர்களை மையப்படுத்துங்கள். வகுப்புக்குப் பொருத்தமான மொழியையே பயன்படுத்துங்கள். ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாக அறிந்து வைத்திருங்கள்.

❖ அவர் வாயாடியா? அமைதியானவரா? ஒதுங்கியிருப்பவரா? தன்னம்பிக்கை உடையவரா? சாந்தமானவரா? இலகுவில் நிலைதடுமாறுபவரா? அவரால் தெளிவாகவும் விரைவாகவும் சிந்திக்க முடியுமா? நகைச்சுவை உணர்வு உள்ளவரா? விசால அறிவு உண்டா? என்பன பற்றியும் அறியுங்கள். மாணவர்களது தன்மைகளை, ஆர்வங்களைக் கண்டுபிடியுங்கள்.

❖ கற்பித்தலின் போது மகிழ்ச்சியாக இருங்கள். உங்களுடன் தொடர்புகொள்ள மாணவர்களை ஊக்குவியுங்கள். கற்றலுக்கான சந்தர்ப்பங்களை அளித்து மாணவர்கள் முழுமையான திறமையினால் உயர்மட்டக் கல்வி நோக்கங்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் அளியுங்கள்.

❖ எல்லா மாணவரிடையேயும் பொதுவாகக் கேள்விகள் பேதமின்றிக் கேட்கப்பட வேண்டும். வகுப்பு ஒன்றாகத் தொழிற்பட வேண்டும்.

❖ உங்கள் அங்க அசைவுகளை மிக அதிகமாகவோ, மிகக்குறைவாகவோ இல்லாமல் மிதமான முறையில் வைத்துக்கொள்ளுங்கள். இயல்பான சைகைகள் யாவும் முக்கியமானவை. அவைகளை இயல்பாகவே வரவிடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கற்றல் கொள்கைகளில் வெவ்வேறு நுணுக்கங்களைக் கையாளுங்கள். வகுப்பையும் நேரத்தையும் பொறுத்து கற்பித்தல் நுணுக்கங்களில் மாற்றங்களைச் செய்யுங்கள்.
- பிள்ளைகளின் கவனம் முதல் 7 நிமிடங்களின் பின்னர் குறைந்து செல்லும். ஆகவே வேறு உத்திகளைக் கையாண்டு ஆர்வத்தைத் தூண்டுங்கள்.
- நீங்கள் பாடங்களைக் கற்பிப்பவர்களாக இல்லாமல் விடயமுகாமை யாளர்களாக இருங்கள். ஒரு முகாமையாளர் ஒரு நோக்கத்தை நிறைவேற்றப் பல்வேறுபட்ட வளங்களைப் பயன்படுத்தி ஆளணியினரை வழிநடத்துபவராவார். பல்வேறுபட்ட வகையில் அறிவைத் திரட்டு வதற்காக வளங்களைப் பயன்படுத்தி மாணவர்களை வழிநடத்துப வராகவே நீங்கள் இருக்க வேண்டும்.
- கற்றலைப் பலப்படுத்துவதற்காக மீளவலியுறுத்தலைக் கைக்கொள்ளுங்கள். ஆனால் அதிகமாகத் திரும்பத் திரும்பச் சொல்லுதல் கவனமின்மையை உண்டாக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.
- சரியான விடையையோ பிழையான விடையையோ சொன்னாலும் மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள். எப்போதும் அளவுக்கு அதிகமான ஊக்கம் கொடுங்கள். ஒரு செயலை பூரணமாகச் செய்து முடித்தேன் என்ற எண்ணம் திருப்தியை அளிக்கும்.
- ஊக்கம் மிகுந்த முயற்சிக்கும் நல்ல விடைகளுக்கும், மாணவர்களைப் பாராட்டுங்கள்.
- அதிகமாக குழு அப்பியாசங்களையும், தனிப்பட்ட அப்பியாசங்களையும் மாணவர்களுக்குக் கொடுங்கள். மாணவர்கள் தாமாகப் படிக்கும் ஆற்றலை வளர்க்க முயற்சி செய்யுங்கள்.
- பாடமுடிவில் பாட அம்சத்தைத் தொகுத்துக் கூறுங்கள், கற்போர், பாட ஆரம்பத்தையும், பாட முடிவையும் நன்கு ஞாபகத்தில் வைத்திருப்பர்.
- பாடவிதானத்தின்படி அல்லது வயது அடிப்படையில் பாடங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையவேண்டும். பாடத்திட்டத்தையும், தினசரி பாடக்குறிப்பையும் பேணி வாருங்கள்.

❖ மாணவருக்கு, ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவைவிட மேலதிகமாகக் கற்பிக்காதீர்கள். ஒரு மாணவனால் இயலாததையும், பகுத்துணர முடியாததையும் கற்பிக்குமாறு ஒருபோதும் வற்புறுத்தித் திணிக்காதீர்கள்.

❖ உங்களது அணுகுமுறையில் ஒரு தர்க்கரீதியான நிலை இருக்கட்டும். கற்பவர்கள் எப்போதும் பழைய அனுபவங்களுடன் புதிய அறிவைப் பெறமுயலுவர். கற்போர் ஏற்கனவே தெரிந்து வைத்திருக்கும் விடயதானத்தில் இருந்தே பாடத்தை ஆரம்பியுங்கள்.

❖ உண்மையான ஆளுமையுள்ள ஒரு ஆசிரியராக, கற்பித்தலில் நேர்மையாகவும், மரியாதையாகவும், எளிமையாகவும் இருங்கள். மாணவர்களின் கவனமின்மையில் அவதானம் கொள்வதுடன், கட்டுப்படாத மாணவர்களையும், கண்காணியுங்கள். தேவையைப் பொறுத்துப் பெற்றோருடன் தொடர்புகொண்டு மாணவனின் வெற்றியை உங்கள் வெற்றியாகக் கருதுங்கள்.

❖ மாணவர்களிடம் அன்பானவராகவும், ஒழுங்குள்ளவராகவும், நம்பிக்கையுள்ளவராகவும் இருங்கள். கூச்ச சுபாவம் உடையவரிடம் அவர்கள் விடைதரக்கூடிய வினாக்களைக் கேட்டு அவர்களை உற்சாகப்படுத்துங்கள்.

❖ வகுப்பில் அவதானத்தோடு இருப்பதுடன், கட்டுப்பாட்டையும் பேணுங்கள். பிள்ளைகளுக்குச் சரியான சூழ்நிலை கொடுக்கப்பட்டால் அறியவும், கற்கவும், கலந்துரையாடவும், எண்ணங்களையும் கருத்துக்களையும் பகிர்ந்து கொள்ளவும், புதிய அம்சங்களையும் உள்நோக்கையும் நுண்ணறிவையும் பெறவும் அக்கறை உடையவர்களாக இருப்பார்கள் என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

❖ கற்கும் சூழல் மாணவர்களது கவனத்தைத் திசைதிருப்பும் முறையில் இல்லாமல் வசதியாக உள்ளதா என்று பாருங்கள். வகுப்பறையின் வசதியே கற்போரின் மனோநிலையைத் தீர்மானிக்கிறது. காற்றோட்டமற்ற அறையில் மாணவர்களால் சிறப்பாகக் கற்க முடியாது. கற்றலின் நிலையும்

[library stamp]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிப்பட்ட வசதியும் சரியாக இல்லாதவிடத்து மாணவர்களின் ஆர்வமும் கவனமும் பாதிக்கப்படலாம்.

❖ கற்போரை ஊக்கப்படுத்தவும், முன்னேற்றத்தைப் பரீட்சிக்கவும், பாடத்தின் தாக்கத்தை அறியவும் கேள்விகளைக் கேளுங்கள். வினாவொன்றை மாணவன் விளங்கிக்கொள்ளவில்லை என்றால் அதற்கு வேறு வடிவம் கொடுங்கள்.

❖ தினமும் எல்லா நிலையிலும் உங்களது கற்பித்தலையும், கற்றலையும் மதிப்பிட மறவாதீர்கள். இச்செயல் உங்களது தொழிலில் உங்கள் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும்.

❖ **அர்ப்பணித்தல்** என்ற விடயமே அறிவுப் பொக்கிஷத்தை அடைவதற்கான சிறந்த திறவுகோல். அர்ப்பணம் அறிவாற்றல் கொண்ட அர்ப்பணம், (Intellectual Commitment ) மன எழுச்சி ரீதியான அர்ப்பணம்( Emotional Commitment), விருப்பாற்றலுடைய அர்ப்பணம் (Volitional Commitment) என மூவகைப்படும். இம் மூவகை அர்ப்பணமும் ஒன்றிணைந்து ஆசிரியரில் அமைய வேண்டும். ஆகவே ஆசிரியரின் சொல்லிலும், செயலிலும் முரண்பாடு இருத்தல் அறவே கூடாது.

❖ பிற உயிர்களை ஒளிமயமாக்குபவர்கள் தமக்கே ஒளியேற்றுபவர்களாவர். இது உத்தமமானதும், சிறந்ததும், மதிப்பு மிக்கதுமான தொழிலாகும் என்பதை நினைவில் இருத்திக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

# வானொலி மூலம் மொழி விருத்தி- கேட்டல்

(Language through Radio - Listening)

(தினகரன் பத்திரிகையில் பிரசுரமானது)

## மொழி என்றால் என்ன?

மொழி என்ற சொல்லுக்கு உலகின்கண் வாழ்ந்த, வாழ்கிற, வாழப்போகும் கல்விமான்கள் பல வரைவிலக்கணங்களைக் கொடுத்துள்ளார்கள், கொடுக்கின்றார்கள், கொடுப்பார்கள். ஆயின் இன்றைய கால கட்டத்தில் அவற்றையெல்லாம் ஒன்றுபடுத்திக் கொடுக்கக்கூடிய வரைவிலக்கண அம்சங்கள் இவையாகும்.

## மொழியின் வரைவிலக்கணம்

1. எல்லாச் சீவராசிகளும், தங்களது உணர்வுகளையும், கருத்துக்களையும் பரிமாற்றம் செய்யும் எந்த முறையும் மொழியாகும்.

2. மனிதர் தமக்குள்ளே கருத்துக்களையும், உணர்வினையும் தொடர்புபடுத்தும் முறையே மொழியாகும்.

3. ஒலிவழி வடிவங்களின் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பே மொழியாகும்.

## மொழியின் நான்கு திறன்கள்

மொழியை நன்கறிந்து கொள்வதற்கு, அதனைப் பூரணமாகப் புரிந்து கொள்வதற்கு மொழியின் நான்கு திறன்களிலும் நாம் பூரண அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**அத்திறன்களாவன-**

1. **கேட்டல்,** 2. **பேசுதல்**–அதிகமாக வீட்டில் நடைபெறுவது.

3. **வாசித்தல்,** 4. **எழுதுதல்**–அதிகமாக இவை பாடசாலையில் நடைபெறும் செயல்களாகும்.

இந்த நான்கு திறன்களும் வானொலிக் கலையில் மிகவும் வேண்டப்படும் முக்கிய சாதனங்களாகும். இவை ஒன்றுக்கு ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பாடுடையவை. குழந்தைகள் கேட்டல் மூலமே பேசப் பழகிக் கொள்கின்றனர். ஆகவே மொழித்திறன்களுள் **கேட்டல்** திறன் மிக முக்கியமானது.

இத்திறன் ஒருவரில் நன்கு செயற்பட்டால், அவர் மற்றைய மூன்று திறன்களையும் இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடியவராவார். கேட்கும் திறனை அநேகர் ஒரு சிறப்பம்சமாக எடுப்பதில்லை. அதனால் போலும் உலகின் அபிவிருத்தி வேலைகள் ஆமை வேகத்தில் செல்கின்றன. கற்றலில், கற்பித்தலில் தொடர்புச் சாதனங்களில் இத்திறன் மிகமுக்கிய இடத்தைப் பெறுகின்றது. ஆகவே கல்வியின் விருத்திக்கு மிகமுக்கிய காரணியாக அமைகின்ற **கேட்டல்** திறனை முதலாவதாக எடுத்துக் கொள்வோம்.

**(1) கேட்டல் வகைகள்:-**

பொதுவான கேட்டலை இரண்டு பிரதான பிரிவுகளுள் அடக்கலாம். அவையாவன:

**1. சமூகமாக இருந்து கேட்டல்:-** அதாவது நண்பர்களுடன் சாதாரணமாக உரையாடுதலைக் கேட்டல், புதியவர்களுடன் உரையாடுதலைக் கேட்டல், மற்றையோருடன் சல்லாபித்தல் ஆகியன இப்பிரிவுக்குள் அடங்கும்.

**2. உற்றுக் கேட்டல்:-** இது மிகவும் கடினமானதும், ஆழ்ந்து சிந்தித்துப் பதித்துக் கொள்ள வேண்டியதுமானது. இக்கேட்டல் மூன்று வழிகளில் இடம்பெறும்.

**(1) கேட்டல்-**

சீரரீதியாக செவிப்புலனைப் பாவித்து, ஓர் அளவு தூரத்துக்குள் காதுக்கெட்டக்கூடிய அளவில் சத்தத்தைக் கேட்டல்.

**(2) கவனித்துக் கேட்டல்-** செவிப் புலனில் சற்றுத் தாக்கம் ஏற்படக்கூடிய விதத்தில் கேட்டல். ஆயினும் பெற்ற சத்தத்தைப் பற்றிய மதிப்பீடோ, பின்னூட்டமோ இங்கு நடைபெறமாட்டாது.

**(3) விளங்கிக் கொள்ளல்-விளங்கிக் கேட்டல்-**

கேட்பவரின் மனத்துடன் கருத்தை ஏற்றுத் தனது ஞானத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியில் அதைச் சீர்த்தூக்கிப் பார்க்கும் இயல்பு இதுவாகும். கேட்டு விளங்கிக் கொள்ளுதல் இடம்பெற, சூழலின் தாக்கம் சாதகமாக அமைதல் வேண்டும். அதாவது தேவையற்ற ஒலிகளை நிறுத்துதல், தொலைபேசி அழைப்பு, மற்றும் கவனத்தைக் கலைக்கும் ஒலிகள் இல்லாதிருத்தல், பத்திரிகைகளைத் திருப்புதல், தட்டுதல் போன்ற சத்தங்கள், அறையின் வெப்பநிலை சீராக அமையாமை, தொடர்பு கொள்வோர் சீரான நிலையில் இல்லாமை, களைத்துப் போயிருத்தல் ஆகியன இதைக் குலைக்கக் கூடிய சில காரணங்களாகும்.

### கேட்டலில் தடை ஏற்படக் காரணங்கள்

1. கேட்ட விடயம் பயம் மிக்கதாக அமையும்போது உணர்ச்சிக்காளாக வேண்டிவரும். அதனால் என்ன சொன்னார்கள் என்பதைக் கவனிக்க முடியாது போகும்.

2. கேட்பவரின் எண்ணக் கருவுக்கு எதிர்மாறான கருத்துக்களாயின் அதற்குத் தனது கருத்துக்களைச் சொல்லத் திட்டமிடுதலால், அல்லது சொன்ன விடயங்கள் சரியா, பிழையா, நல்லதா, கெட்டதா எனப் பிரிக்க முற்படும் பொழுது கவனித்தலில் ஆர்வம் இழக்க நேரிடும்.

3. பேச்சாளரை விரும்பாவிடில் அல்லது அவரது நடைமுறைத் தோற்றம் என்பவற்றை விரும்பாவிடில் கேட்டல் நடைமுறை துண்டிக்கப்படும். அல்லது சிதைவேற்படும்.

4. முதன்மையான அம்சம், கேட்பவரின் வலியுறுத்தும் தன்மை பேசுபவரிலிருந்து வேறாக அமையும் போது கேட்பவை கேளாமற் போகலாம்.

5. மிகவும் சிநேகபூர்வமற்ற பேச்சை ஆவலுடன் கேட்கமாட்டார்கள். சிநேகபூர்வமாக, அன்னியோன்யமாகப் பேசும் பேச்சு மனதைக் கவரக்கூடியது.

### கேட்டலுக்குத் தூண்டுகோலாக அமைவன

1. ஒருவர் பேசுவதைக் கேட்கும் போது அதற்கான விடைகளை ஆயத்தம் செய்து கொண்டிராது கேட்டல் வேண்டும். இல்லையேல் கேட்டல் சரிவர நடைபெறாது.

2. முன்னரே கேட்டிருந்த விடயமாயின், ஆர்வம் குன்றும். இச்சந்தர்ப்பத்தில் கேட்பவர் முந்திய உரையாடலில் எதை நினைவுகூரலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் தன்னைக் கேட்டுக் கொள்ளல் வேண்டும்.

3. வேறுபாடுகளை ஏற்றுக் கொள்க: நல்லதோ கெட்டதோ, சரியோ பிழையோ காரியமில்லை. பேச்சில் வேறுபாடுகள் அமையும்போது கேட்போரின் மனதில் பேச்சைக் கேட்கும்படி தூண்டலேற்படும்.

4. எவ்வாறு சொல்லப்படுகிறது, பேசப்படுகிறது என்பதைக் கவனிக்குக. பேச்சாளர் பேசும்போது நாலு விசேட தன்மைகளை மனதிலிருத்திப் பேசலாம்.

(அ) **வலியுறுத்தல்:** மீண்டும் மீண்டும் ஒரே வசனத்தைக் கூறல்.

(ஆ) **பேச்சு வேகம்:** பேச்சாளரின் வேகம் சாதாரணமாக நடைமுறையிலிருப்பதை விட உணர்வுகளுக்கமைய வேறுபடுதல் கூடும்.

(இ) **சத்தம், அழுத்தம்** அல்லது விருப்பம் ஆவல் மேலெழும்போது சத்தம் மேல் ஸ்தாயியில் இருக்கும்.

(ஈ) **சத்த வேறுபாடு:** சத்தத்தின் வேறுபாட்டுக்குக் காரணம் உணர்ச்சியின் வேறுபாட்டுத் தன்மையாகும்.

5. மிகவும் திறமையாகக் கேட்பவர் வசனங்களுக்கிடையே உள்ள நேரத்தை, கேட்ட பேச்சினை மீட்பதற்கும் அதைத் தனது மொழியாட்சியில் அமைப்பதற்கும், மனதில் கற்பனை செய்வதற்கும், முகபாவனையில் அதை வெளிக் காட்டுவதற்கும் உபயோகிப்பர்.

6. கேட்டவற்றை மனதில் பதித்து வைப்பதற்கு, கேட்ட பேச்சை மீண்டும் சொல்லுதல் சிறிய வசனங்களில் சுருக்கிக் கூறல், விளங்கிக் கொண்டதை அறிய வினாக்கள் எழுப்புதல் என்பன உதவி புரியும்.

ஒரு பேச்சை, உள்ளடக்கத்தைக் கொண்டு மதிப்பிடுக. பேச்சுத்தன்மையைக் கொண்டு அல்ல, பேச்சு மூலம் அன்றிப் பேசும் நடைமுறையைக் கவனிக்குக. பேச்சாளர் சொற்பிரயோக மூலம் மட்டும் தொடர்புபடுவதில்லை. மக்கள் தங்கள் அங்க அசைவுகள், உணர்ச்சிகள், முகபாவனைகள் மூலம் பேசுகிறார்கள்.

அதே நேரம் அங்க அசைவுகள் திறமையான கேட்டலுக்கு அடிப்படையாக அமைகின்றன. குறிப்பாகப் பின்வரும் அம்சங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவம் அளிக்கப்படல் வேண்டும்:-

(1)கண்வழித் தொடர்பு: எவ்வாறு ஒருவர் மற்றவரைப் பார்க்கின்றார்.

(2) கைகளின் அசைவு.

(3) நிற்கும் நிலை: ஒருவர் நிற்கும்தோற்றம், அமர்ந்திருக்கும் முறை என்பன.

**பேசுவோரிடமிருந்து பேச்சைக் கேட்பதற்குத் தடையாக அமைவன.-**

சீரற்ற மொழிநடை, ஒவ்வாத மொழியாட்சி, பேச்சாளரின் தெளிவற்ற விடயம், பேசும்போது அவர் செய்யும் பொருத்தமற்ற அங்க அசைவுகள், பொருந்தாத அணி உடை, தெளிவற்ற உச்சரிப்பு யாவும் இவரின் பேச்சை மற்றவர்கள் கேட்கத் தடையாக அமையலாம்.

**பேச்சைக் கேட்கத் தடையாகவுள்ள வேறு காரணிகள்-**

கேட்டலுக்குத் தடையாகவுள்ள முக்கிய அம்சம், நினைவுக்கு எடுத்துக் கொள்ள முடியாத வகையில் பேச்சைக் கேட்டலாகும். பேச்சின் அம்சங்கள் கூடிய வேகத்தில் இடம்பெறல் வேண்டும். சாதாரணமாக ஒரு நிமிடத்தில் 100 முதல் 200 வரையான சொற்களையே பேச முடியும். இவ்வாறு அமையும்போதே பயனுள்ள கேட்டல் நிகழ முடியும். அப்போதுதான் பேச்சாளர் சொல்வதைக் கிரகிக்க முடியும்.

**உற்றுக்கேட்டலைத் தினமும் வளர்க்கக்கூடிய பயிற்சி-**

1. கதைப்பதை நிறுத்தி உற்றுக் கேட்கப் பழகுக. **இயற்கை, இரண்டு காதுகளையும், ஒரு நாக்கையும் மட்டுமே தந்துள்ளது.** இதை மறக்க வேண்டாம்.

2. உற்றுக் கேட்க ஆயத்தம் செய்க. உற்றுக்கேட்டல் ஒரு துரித செயல்-சாதாரண செயற்பாடல்ல.

3. பேசுபவரைச் சுயாதீனமாகப் பேசவிட்டு அவரின் பேச்சுக்குச் செவிசாய்க்குக.

4. வேறு தடைகள் இருக்கவிட வேண்டாம். பேப்பர் சத்தம், தட்டும் ஒலி, தொலைபேசிச் சத்தம் யாவும் தவிர்க்கப்படல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பேச்சாளரோடு சேர்ந்து செல்க. அவரின் ஆளுமையையும் கருத்துக்களையும் விளங்கி அவருடன் சேர்ந்து கேட்குக.

6. அமைதியாக அமர்ந்திருந்து கிரகித்துக் கேட்டுக் கொள்க- தடை செய்ய வேண்டாம்.

7. உணர்ச்சி வேகத்தோடு பேசிய பேச்சை உணர்ந்து கொள்க. அவை பேச்சைச் சிதைக்க இடமளிக்க வேண்டாம்.

8. பாரபட்சமாகப் பேசவேண்டாம். பேசுபவரின் பேச்சல்ல, அவரின் பார்வை முக்கியம். இதை நன்கு விளங்கிக் கொள்க. (இது மேடைப் பேச்சில் மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது)

9. பேசுபவரின் குரலை -தொனியை உணர்க. பேச்சில் தொனி, குரல் இரண்டும் மிகவும் விசேடமானவை.

10. பேச்சில் அமையும் குரலற்ற பேச்சை உணர்ந்து கொள்க. அசைவுகள், முகபாவனை, மெய்யசைவு, கண்பார்வை இவை யாவும் பேச்சில் மிகவும் பிரதானமானவை. உற்றுக்கேட்டலின் திறத்தினை இவை மேன்மைப்படுத்தும்.

11. வெகுசனத் தொடர்புச் சாதனங்களாகிய வானொலி, தொலைக்காட்சி, மற்றும் இலக்ரோனிக் கருவிகள் மூலம் பேச்சைக் கேட்கும்போது அவற்றின் மூலம் ஒலியைத் தெளிவுறப்பெற உங்களால் ஆனமட்டும் முயற்சி செய்க.

(1) அலைவரிசை சரியாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதா என்பதைத் தீர்மானிக்குக.

(2) மின்சாரம் சரிவரப் பாய்ச்சப்படுகிறதா எனக் கவனிக்குக.

(3) மீற்றர் தெளிவானதா என்பதைக் கணித்துக் கொள்க.

12. கேட்கப் பாவிக்கும் காதாகிய உறுப்பு 'உயிராக' இருக்கிறதா என்பதைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். (செவியைச் செவிடற்றதாக- செவ்வையாக வைத்துக் கொள்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# வானொலி மூலம் மொழி விருத்தி- வாசிப்பு

(Language development through Radio- Reading)

(தினகரன் பத்திரிகையில் பிரசுரமானது)

**வாசிப்பு** (Reading)

ஓதுவது ஒழியேல் என்ற வாக்கிற்கு இணங்க வாசிப்பு, மொழி வளர்ச்சிக்கு இன்றி அமையாத ஒன்று. வாசித்தல் என்பது கையெழுத்தில் அல்லது அச்செழுத்தில் உள்ளதைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்து பொருள் உணர்வதாகும். வாசிப்பு எளிதான செயல் அன்று. வரிவடிவத்திலுள்ளதை ஒலி வடிவமாக மாற்றி, உச்சரிக்கும் உறுப்புகளும், சொற்களை நோக்கும் கண்களும், ஒத்துழைக்கும் போதே வாசித்தல் சரியாக இடம்பெறும்.

ஒரு நோக்கத்துடன் வாசிப்பது வாசிப்பின் முக்கிய அம்சமாகும். ஏதாவதொரு விடயத்தை நன்றாக தெளிவுபடுத்த, அல்லது கேட்கப்பட்ட வினாவுக்கு விடை காண சிலவேளைகளில் நோக்கத்தை திடமாகக் கூற முடியாவிடினும் வாசிப்பில் நோக்கம் நிச்சயமாக இருத்தல் அவசியம். வாசிப்பின் நோக்கங்களை பின்வருமாறு வகுக்கலாம். அவையாவன:-

1. கருத்துணர்தல்
2. இலக்கிய இன்பம் நுகர்தல்
3. கற்பனை ஆற்றல் வளர்தல்
4. மொழித்திறன் அடைதல் என்பன.

வாசித்தல் இருவகைப்படும் அவையாவன-

உரத்து வாசிப்பு, மௌன வாசிப்பு.

NF 40178

## 1. உரத்து வாசிப்பு-

உரத்து வாசித்தல் என்பது எழுத்துக்களைக் கண்ணால் பார்த்து வாயால் உச்சரித்துச் சொல்லிப் பொருள் உணர்தலாகும். உரத்து வாசித்தல், பேசுவதற்கு துணை புரிகின்றது. அடுத்து வாசிப்பினால் ஓசை நயத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுள் இன்பத்தையும் நன்கு உணர முடிகின்றது. உணர்ச்சி, உளச்சுவை ஏற்பட இவ்வாசிப்பு உதவுகின்றது.

## மௌன வாசிப்பு:

மௌன வாசிப்பு என்பது வாய் திறவாமல் உதடுகள் அசையாமல் ஒலித்தல், உச்சரிப்பு இன்றி முணுமுணுப்புக்கூட இல்லாது படித்தலைக் குறிக்கும். கருத்துணர்ந்து படிக்க இம்முறை மிகவும் உதவும். இதனால் விரைவாகவும் விரிவாகவும் கருத்துணர முடியும். இவ்வாசிப்பினால் உடற்சோர்வு ஏற்படாது. கண்ணும் மனமும் மட்டுமே செயற்படுவதால் படிக்கும் பொருளில் அதிக கவனம் செல்லும். குறைந்த நேரத்தில் அதிகளவு வாசிக்க முடியும். அடுத்தவருக்கு இடையூறாக இல்லாமல் இருக்கமுடியும். இவ்வாசிப்பு முறை, சொற்களஞ்சியத்தை உறுதி செய்ய, அதனை வளர்க்கத் துணையாயமையும்.

வாசிக்கும்போது கருத்துணரும் ஆற்றலுடன் வேகமாகப் படிக்கும் பழக்கமும் கைவரப்பெறுதல் இன்றியமையாதது. வாசிக்கும்போது வேகம் பொருளுக்கேற்றவாறும், தேவைக்கேற்றவாறும் மாறுபடும். எல்லா நூல்களையும் ஒரே வேகத்துடன் வாசிக்க வேண்டும் என்பது தவறானது. அறிவியற் கட்டுரையை வாசிக்க அதிக நேரம் தேவை. கதைகளாயின் குறைந்தளவு நேரம் போதுமானது. வானொலிக்கலையில் மௌன வாசிப்பு ஒத்திகை நேரத்திலும், நாடகங்களை நடிக்கும் வேளைகளிலும் பிரயோசனப்படும் (இவை பொதுவான வாசிப்புக்கு உகந்தவை)

### திறன்களை வளர்க்கும் வாசிப்பு

இதன் மூலம் விரைவை உண்டாக்கலாம். கருத்துணரலாம். சொற் களஞ்சியத்தைப் பெருக்கலாம், நினைவாற்றலை வளர்க்கலாம்.

### பொழுது போக்குப் படிப்பு

இலக்கிய இன்பங் கருதி ஓய்வு நேரத்தைக் கழிக்கக் கருதியும் வாய்விட்டுப் படித்து பிறருக்கு மகிழ்ச்சி ஊட்டக் கருதியும் வாசிப்பது பொழுது போக்குப் படிப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயன் கருதிய கற்பித்தல்**

பயன்கருதிப் படிக்கும் எல்லா வாசிப்பும் இதில் அடங்கும். வாசித்தல் வாழ்க்கை முழுவதும் பயன் படக்கூடியது. எல்லாத் துறைகளிலுமுள்ள சொற்களஞ்சியம் குழந்தைகளிடம் பெருகும்போது வாசித்தலில் விரைவும் சுவையும் உற்சாகமும் உண்டாகும்.

## வானொலியில் வாசிப்பு

வானொலியில் வாசிக்கும்போது கவனிக்கப்பட வேண்டிய பொதுவான அம்சங்கள்–

ஒலிபரப்புக் கலைக்கு வாசித்தல் முக்கியமாக நாவன்மையைப் பொறுத்திருப்பதால், அதற்கு இன்றியமையாத இனிய குரல் இருக்கிறதா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். **"வானொலி வாசிப்பு என்பது சொல்வது"** இதைக் கவனத்தில் கொண்டு வாசிக்கும் தொழிற்பாட்டை மேற்கொள்ளுங்கள்.

❖ பொருளறிந்து பாத்திரங்களின் தன்மை, சந்தர்ப்பங்கள் ஆகியவை வெளிப்படும் விதத்தில் வாசிப்பது அவசியம். வாசித்தல் மூலம் நாம் தொடர்பு கொள்கிறோம், என்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

❖ குறியீடுகளுக்கு முக்கிய கவனம் செலுத்தி, ஊன்றிக் கவனிக்க வேண்டிய பகுதிகளில் கூடிய அவதானம் செலுத்துதல் வேண்டும்.

❖ கேட்பவர்களின் கவனத்தை ஈர்க்கும் வண்ணம் வாசித்தல் வேண்டும். தகவலை வாசிப்பது வேறு, தகவலைச் சொல்வது வேறு– சொல்லும் பாணியே வானொலிப் பேச்சுப் பாணியாக வேண்டும்.

❖ நாலுவித மொழித் திறன்களுள் (கேட்டல், பேசுதல், எழுதுதல், வாசித்தல் என்பவற்றுள்) வாசித்தலுக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட வேண்டும். சொற்கள் சாதாரணவழக்கில் இருப்பினும், அவற்றுக்குப் புத்துயிர் கொடுப்பதாக வானொலி வாசிப்பு அமையவேண்டும்.

❖ கிரகித்தலுடன் வாசித்தல், அறிவைப் பெற்றுக்கொள்ள உதவியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். ஆகவே வாசிக்கும்போது வாசிப்பவர் பொருளைக் கிரகித்த வண்ணம் வாசிக்க வேண்டும்.

- வாசிக்கும்போது எல்லோருக்கும் கேட்கும்வண்ணம் வாசிக்க வேண்டும். வானொலிக்கு வாசிக்கும் போது இருக்கும், நிற்கும் நிலைகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும். ஒலியைக் கூட்ட, குறைக்க ஒலிவாங்கி உங்களுக்கு உதவி செய்யும் என்பதை மறக்காதீர்கள்.
- பதிக்க வேண்டிய இடத்தில் பதித்து, தாழ்வு–உயர்வு, சோகம்– மகிழ்ச்சி ஆகியவை வெளிவரக்கூடிய வண்ணம் வாசிக்க வேண்டும்.
- வாசிக்கும் பகுதியை விளங்கத்தக்கதாக தெளிவுற வாசிக்க வேண்டும். வானொலிப் பேச்சுக்கு ஊன்று கோலாக மாத்திரம் எழுத்துப்பிரதியை உபயோகிப்பதல்லாமல், அதனை ஒரு கட்டுரைப்பிரதியாகக் கருதக்கூடாது.
- இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் அந்தந்த இயல்பாற்றலுக்கு ஏற்ப அந்தந்த முறையில் இனிமை தொனிக்க வாசிக்க வேண்டும்.
- ஒரு விடயத்தில் மிகமுக்கியமான பகுதி, முக்கியத்துவம் குறைந்த பகுதி என்று இரண்டு இருக்கும். இவற்றில் முக்கியமான பகுதிக்கு எவ்வாறு முக்கியத்துவம் கொடுப்பது என்பது வானொலிப் பேச்சில்– வாசிப்பில் தெரிந்திருக்க வேண்டியதொன்று. இதில்தான் வலியுறுத்தல் முக்கியமாகிறது. சில சொற்களை அழுத்தியும் சில சொற்களை மென்மையாகப் பேசியும், இந்தக் கருத்து வித்தியாசத்தைக் காண்பிக்கலாம்.
- ஒரேதொனியில் ஒரே (Pitch) "பிச்" இல் குரலை வைத்திருந்தால் பேச்சு கேட்பவருக்கு சுவாரஸ்யமாக இருக்காது. தாழ்த்தியும் உயர்த்தியும் வேறுபாட்டைப் பொருத்தமாகக் காண்பிக்க வேண்டும்.
- வாசிக்கும்போது கால அளவு கவனிக்கப்படவேண்டும். அதாவது மாத்திரையில் வேறுபாடு காண்பிப்பது அவசியம். இந்த நேரக்கணிப்பு **மூன்று** விதத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) ஒரு சொல்லின் அல்லது வாக்கியத்தின் முன் அல்லது பின், நிசப்தமாக இருத்தல்.

(ஆ) ஒரு சொல்லை அல்லது வாக்கியத்தை நீட்டி ஒலிக்கச் செய்தல்.

(இ) தொனிப்பேத வேறுபாட்டுடன் வாசித்தல்.

❖ வாசிப்பின் வேகம், சாதாரணமாக நேயர்கள் புரிந்து கொள்ளத்தக்கதாக இருத்தல் வேண்டும். புயலாகச் செல்லாமலும், அதே சமயம் நத்தை வேகத்தில் இல்லாமலும் இடையிட்டதாக அமைவது சிறந்தது.

❖ வாசிப்பினால் கேட்பவரை ஒரு விடயத்தை அப்படியே கற்பனை செய்ய வைத்தல் வேண்டும். இதற்கு ஒவ்வொரு சொல்லும் கருத்தும் வாசிப்பைக் கேட்பவருக்குப் புரிந்திருக்க வேண்டும்.

❖ தொடர்ந்து பேசிக் கொண்டே இருக்கவேண்டும் என்று எண்ணுதல் தவறு. தேவையான இடத்தில் நிறுத்தி வாசிக்கும் பொழுதே அதுபேசுவது போன்றிருக்கும்.

❖ இவ்வம்சங்களை வாசிப்பில் கடைப்பிடித்து வருவீர்களாயின் வாசிப்பில் விற்பன்னராக, சிறந்த வானொலியாளராக வரக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டென்பதை உணர்ந்து கொள்வீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# வானொலி மூலம் மொழிவிருத்தி– எழுத்தாற்றல்

(Writing for Radio)

(தினகரன் பத்திரிகையில் பிரசுரமானது)

## தொடர்பு சாதனமாகிய வானொலிக்கு எழுதும் போது அமைய வேண்டிய குணாதிசயங்கள் வருமாறு:-

வானொலிக்கு எழுதுவதென்பது, வானொலிப்பேச்சைத் தயார் செய்வதென்பதாகும். நேர்முக வர்ணனை, விமர்சனம், பேட்டி இவற்றைத் தவிர வானொலிப்பேச்சிக்கு எழுத்துப் பிரதி மிக அவசியம். எழுத்துப் பிரதியில்லாமல் வானொலியில் எவரும் பேசுவதில்லை. வானொலிக்குப் பிரதியை தயார் செய்யும்போது எழுத்திலே குறியீடுகள், தடித்த எழுத்து, மெல்லிய எழுத்து தலையங்கம், பந்தி, வரியின் கீழ்க் கோடு முதலிய பல்வேறு தந்திரங்களை மேற்கொண்டு வானொலிப் பேச்சில் பிறக்க வேண்டிய உணர்ச்சி வேறுபாடுகளைக் காண்பிக்க முயலுங்கள்.

**வானொலி எழுத்தாளரில் பதிந்திருக்க வேண்டிய பத்துக் கற்பனைகள்: (கட்டளைகள்)**

❖ பொதுமைப்படுத்த வேண்டாம். பேச்சில் திடமாயிரு. ஒவ்வொரு செயலையும் எண்ணக் கருக்களையும் உதாரணங்கள் மூலம் விளக்குக. எண்ணக்கருக்களை நேராகப் பார்க்க முடியாது. அதாவது ரேடியோ ஒரு குருட்டுச் சாதனம் என்பதை நினைவு படுத்திக்கொள்க.

❖ உமது தோற்றத்தைக் கவனிக்குக. கம்பீரமான தொடக்கம் நிகழ்ச்சியைக் கடைசிவரைகேட்க உறுதுணைபுரியும். ஆரம்பத்தில் ஏற்படுத்தப்பட்ட அபிப்பிராயம் நிலைக்க வேண்டுமென்பதே நீங்கள் விரும்புவது. ஆகவே இடையிடையே தர்க்க ரீதியான கருத்துக்களையும், சொற்கள், சத்தங்கள் மூலம் படங்களையும் தீட்டிச் செல்லுங்கள்.

❖ எளிமையான சொற்பிரயோகங்களைப் பாவிக்குக. அடைமொழிகளை ஏராளமாக அள்ளி அள்ளி வீச வேண்டாம். இது நாவைச்சுழற்றும் ஒவ்வொரு வாக்கியமும் ஒவ்வொரு வகையில் தொடங்க வேண்டும் என்றில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வானொலிப்பேச்சைக் கேட்போர் பின்னோக்கிப் போகவோ அல்லது கதைத்ததை நினைவுபடுத்தவோ முடியாது. அதாவது கூர்மையான அம்பு எய்தபின் திரும்பி வராதது போன்று இது அமையும்.
- பேச்சில் அதிக சட்ட திட்டங்களை அமைத்துக் கொள்ள முயலாதே. இயற்கையான பேச்சைப் போன்று தொடர்பாடல் இயலுமானவரை நிகழ்ந்தால் அது போதுமானது. வாக்கியத்தில் இலக்கண அமைப்பை அதிகமாக நினைவு கூர்ந்து, தொடர்பாடலை அறுத்துக் கொள்ளத் தேவையில்லை.
- இயலுமானவரை "அதாவது", "அடுத்து", "நல்லது", "சரி" போன்ற சொற்களை அடிக்கடி பாவிப்பதிலிருந்து தவிர்த்துக் கொள்க.
- வாக்கியங்களைத் தன்மைப்படுத்திப் பாவிக்குக. ஒருவர், அவர், இவர் என்பதற்குப் பதிலாக எனது, உனது, என்னும் பதங்களைப் பயன்படுத்துக.
- ஒரே சொற்களை அடிக்கடி உபயோகிக்க வேண்டாம். அவசியமாயின் நாடகத்தில் மட்டும் பயன்படுத்துக. மற்றும் வலியுறுத்துவதற்காகவும், பதித்தல் பொருட்டும் இவற்றைப் பாவிக்கலாம்.
- ஒரு தொகை மக்களையோ ஒரு பொருளின் விலையையோ குறிப்பிடும் போது சரியானதைக் கூறத் தெண்டித்துத் தொடர்பை அறுத்துக் கொள்ள வேண்டாம். 19999ஐ, கிட்டத்தட்ட 20,000ஆயிரம் என்று கூறுவது சிறந்தது. மிகவும் நுட்பமாகக் கதைப்பது எண்களைப் பொறுத்தவரை ரேடியோப் பேச்சில் பயனைத்தராது போகலாம்.
- நேரம் வந்தால் நிறுத்திக் கொள். அதிகம் அலட்டுவதிலும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் எல்லாக் கருத்துக்களையும் சுருங்கக் கூறி விளங்கவைப்பது மேல்.
- கிறிஸ்தவ மார்க்கத்தில் பத்துக்கற்பனை ஒரு பக்தனை எப்படி பக்திமானாக்கி முக்தியைப் பெறச் செய்யுமோ அதேபோன்று இப்பத்து குணாதிசயங்களை மனதில் கொண்டு அனுபவ ரீதியாக்கி உங்கள் வானொலி எழுத்துக்கலையை வளர்ப்பீர்கள் ஆயின் கட்டாயம் உங்கள் ஆக்க சக்தியில் வளம்பெற்று ஒலிபரப்புக் கலையில் கரை காண்பீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ சுருங்கக்கூறில் – சுருங்கச் சொல்லுதல், (ஆரம்பம், உடல், முடிவு மூன்றும் நன்றாக அமைய) விளங்க வைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நல்லொழுக்கங்களை உணர்தல், ஓசையுடைமை, ஆழமுடைமை, ஒழுங்கு அமைப்பு, தெளிவுற எழுதுதல், உயர்ந்த கருத்துக்களை எழுதுதல், எடுத்துக் காட்டுக்களால் விளக்கல் என்பன வானொலிக்கு எழுதும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

❖ பொருள்விளக்கம் குறைவுபடக்கூறல், மிகைப்படக்கூறல், கூறியது கூறல், முன்பின் முரண்படக்கூறல், குற்றமுள்ள சொற்களைக் கையாளுதல், கருத்துத்தெளிவின்மை, மயக்கம், பயனற்ற வார்த்தை களைக் கூறல், எடுத்துக் கொண்ட பொருளுடன் தொடர்பு படாதவற்றைக் கூறல், ஆரம்பம் நன்றாக அமைந்து, உடலும் முடிவுரையும் நன்கு அமையாமை, கேட்போர் மனிதில் நின்று பயனை விளைவிக்காத் தன்மை என்பன தவிர்க்க வேண்டிய குறைபாட்டு அம்சங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# வானொலிப் பேச்சில் காணப்பட வேண்டிய குணாதிசயங்கள்

(Qualities of a Radio speaker)

(தினகரன் பத்திரிகையில் பிரசுரமானது)

**பேச்சு -**

கேட்டலோடு மிகவும் தொடர்புடையது பேச்சு. வாயில் வரும் சொல்–அதாவது வாய்ச்சொல் உயிரோடு சம்பந்தப்பட்ட உணர்ச்சிகளைக் கொண்டது. உள்ளத்தில் இருந்து பிறக்கும் கருத்தை அக்கருத்தின் அந்தரங்க உணர்ச்சியில் குழைத்து உயிருடன் வெளியிடுவதற்கு ஏதுவான சாதனம் பேச்சு ஒன்றுதான். குரலின் தன்மை, ஏற்றத்தாழ்ச்சி, குழைவு, நெளிவு இவைகளின் வழியாக உள்ளக்கருத்தின் உணர்ச்சி அலைகளை அதற்குரிய உயிர்ப்பண்புடன் வெளியிட உதவுவது– பேச்சொன்றேதான். பேச்சில், உயிர் நிறைந்திருந்து, உணர்ச்சியை வெளிக்கொண்டு வரும். இப்படிப்பட்ட உயிர்மிக்க, உணர்ச்சிமிக்க பேச்சு வானொலிக்கூடாக ஒலிபரப்பப்பட்டு வரும் போது அதில் காணப்படவேண்டிய குணாதிசயங்கள் எவையென நோக்குவோம்.

## வானொலிப் பேச்சில் காணப்பட வேண்டிய குணாதிசயங்கள்-

**வானொலியில் பேசும் போது இத்தரவுகளைப் பின்பற்றுங்கள்.**

- வானொலிப் பேச்சு முக்கியமாக நாவன்மையைப் பொறுத்திருப்பதால் அதற்கு இன்றியமையாத இனிய குரல் உங்களிடம் இருக்கிறதா என நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.
- சம நிலையில் நிற்குக. எளிமையைப் பேணுக, இயற்கையாகப் பேசப் பழகுக.
- ஒலிவாங்கிக்கு முன் நிற்கிறீர்கள் என்பதை மறக்கவேண்டாம். ஆகவே உங்கள் இயற்கையான பேச்சை ஒலிவாங்கி ஏற்று, பின்னர் தெளிவாக ஒலி பெருக்கி மூலம் விளக்கமாக ஒலிபெருக்கக்கூடிய தூரத்தில் நின்று பேசுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ வானொலி கணத்தில் மறைகிற ஒருவழிப் பேச்சுமொழி. வானொலியில் பேசுபவற்றை ஒரே முறையில் விளங்கிக் கொண்டால் அது அபாரமானது. ஆகவே பேச்சு, தூண்டுதல் மிக்கதாக, கவர்ச்சியுடையதாக அமைய வேண்டும்.

❖ வானொலி கேட்பது தன்னிச்சையான ஒரு செயல். தன்விருப்பம் கொண்ட பயன்பாடு. ஆகவே கவர்ச்சி முறையான தொடர்பாடல் இடம் பெற வேண்டும். "ஒருவருக்கொருவர்" என்னும் தொடர்பாடு நிகழ வேண்டும். இத் தொடர்பு பற்றார்வம் உள்ள, உணர்ச்சி மிக்க பேச்சாக அமைய வேண்டும்.

❖ நம்பிக்கையேற்படும் வகையில் உறுதியுடன் உரையாடுவது மிக முக்கியம். ஆகவே நம்பத்தக்கவற்றை மட்டும் பேசி நம்பவைக்குக. பார்த்து வாசித்தல், நல்ல தொடர்பாடலை அழிக்கும் செயலாகும்.

❖ வானொலிப் பேச்சாளர் அவரின் பேச்சில் நாணயமாகத் தொழிற்படுவது மெச்சத்தக்கது. இப்படிச் செய்வதன் மூலம் வரவேற்புக்குரிய இனிமையான, சிநேகபூர்வமான தன்மையை நேயர்களிடம் அவர் ஏற்படுத்திக்கொள்ளலாம்.

❖ வானொலிப் பேச்சில் இடைவெளி, நேரம் தரித்துக் கதைத்தல், என்பவற்றை புறக்கணித்தல் கூடாது. வானொலியில் பேசும் போது இவை தொடர்பாக கட்டாய வலியுறுத்தல் அவசியம்.

❖ பேச்சை மேன்மைப்படுத்த அதையோர் அழகியல் கலையாக அமைத்து, உணர்ச்சி வேகம் தொனிக்கத்தக்கதாக, ஆர்வம் மிக்கதாக பேச்சை சிறந்த பாணியில் கொடுக்க முனைக.

❖ அதிக சொற்களைப் பயன்படுத்துவதென்பது அவசியமல்ல. நல்ல முறையில் சாரத்துடன் பேசுவதே மிக அவசியம்.

❖ மேடைப் பேச்சு வேண்டாம். உரைத்தல் விரும்பத்தக்கது. தொடர்பாடல் விரும்பின் இலக்கணத்தை ஓரளவு மறந்து விடுக.

❖ எந்த வயதுடையோருடனும், எந்த நிலையைச் சார்ந்தவர்களுடனும் அவர்களுக்குக் கீழ் மட்டத்தில் போய் கதைக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானியாயிருந்தாலும் அவர்களின் எல்லைக்கு மேலும் சென்று பேச வேண்டாம்.

- ❖ சொற்களின் கருத்தை குரல் மூலமாக தெரிவித்தல் வேண்டும். பேச்சுத்திறனை வளர்க்க வேறுவழியில்லை. குரல்கள், சத்தம், நிறங்கள் போன்று பல வேறுபாடான நிழற்கருத்து வேறுபாடுகளைத் தரக்கூடியவை. மனித வெற்றியின் அடிப்படை, குரல் என்பதை ஒரு சிலரே உணர்வர்.
- ❖ எந்தவகையான தற்செயல் நிகழ்ச்சிகளையும் எதிர்நோக்க கலையகத்தில் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். சஞ்சல நேரத்திலும் தோல்வியை ஏற்று வெள்ளைக்கொடி காட்ட இடங்கொடாதீர்கள். (சமாளிக்கும் தன்மை வேண்டும்)
- ❖ எளிமையான, நேரடியான மொழியை செட்டாக(சுருக்கமாக) உபயோகித்தல் வேண்டும். வினைச்சொல், சொற்றொடர்கள் அடைமொழிகளை புத்தியாகத் தெரிந்து பயன்படுத்துங்கள்.
- ❖ வானொலிப் பேச்சாளருக்கு அலுப்புத் தட்டாத (பிணைப்பில்லா) நாணயமான மனநிலை அவசியம். குரலில் தொடர்ச்சியான தூண்டக் கூடிய வகைப்படுத்தல் அவசியம். இப்படிச் செய்வதன் மூலம் மேன்மையான கருத்துக்களை, நிச்சயபூர்வமானவையாக மாற்றலாம். இச்செய்கை ஏனையோரின் மனவளர்ச்சியை வளர்க்க உறுதுணை புரியும். இக்குணாதிசயங்களைக் கடைப்பிடித்து வானொலிப் பேச்சுக்களை அமைத்து சிறந்த ஒலிபரப்பாளராக நீங்கள் மிளிரலாம் என்பதை ஞாபகத்தில் இருத்திக் கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# விளையாட்டு மூலம் மொழி கற்பித்தல்

(Language through Play Method)

(தினகரன் பத்திரிகையில் பிரசுரமானது)

மொழி கற்பித்தலில் பல்வேறு நவீன உத்திகள் இன்று ஆசிரியர்களால் கையாளப்படுகின்றன. விளையாட்டுக்களும் அத்தகைய உத்திகளுள் முக்கியமானவை. தமிழ்மொழி கற்பித்தலை சுவையுடையதாக்குவதிலே விளையாட்டுக்களும் முக்கியத்துவம் பெறுவதை பல ஆய்வுகள் விளக்குகின்றன.

மொழி கற்பித்தலில் காணப்படும் நான்கு முக்கிய திறன்களாகிய

1. கேட்டல்
2. பேசுதல்
3. வாசித்தல்
4. எழுதுதல்

என்னும் திறன்களை- வளப்படுத்த மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் பலவித விளையாட்டுக்களைக் கையாளலாம். அவற்றுள் சிலவற்றை இங்கே நோக்குவோம்.

## (1) கேட்டலுக்கான விளையாட்டு

கேட்டலுக்கான விளையாட்டு–எண்ணக்கருக்களைப் பதிப்பதற்கான விளையாட்டு **திராட்சை இரசம்.**

(அ) ஒரு குழுவினரை வட்டமாக ஒழுங்குபடுத்துங்கள். குழுவிலுள்ள ஒருவரின் காதில் ஒரு சிறிய செய்தியை இரகசியமாகக் கூறுங்கள். (ஒன்று அல்லது இரண்டு வசனங்களாக இருப்பது நல்லது) விடயத்தைக் கேட்டவர் தனக்கு இடதுபுறத்திலோ அல்லது வலதுபுறத்திலோ இருக்கும் மற்றொருவருக்குத் தான் கேட்ட இச்செய்தியை இரகசியமாகக் கூற வேண்டும். இவ்வாறாக வட்டத்திலுள்ள குழுவினர் அனைவருக்கும் இச்செய்தி ஒருவருக்கொருவர் கேட்கும் வகையில் இரகசியமாகச் சொல்லப்படுதல் வேண்டும். இறுதியாகக் கேட்டவரிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தியைச் சொல்லும்படி செய்து, முதலில் சொல்லப்பட்ட மூலச் செய்தியுடன் அதை ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும். ஒரு வித்தியாசத்தைக் காண்பீர்கள்.

(ஆ) குழுவை இரண்டாகப் பிரிக்கவும். (தமது குழுவுக்கு அவர்களே பெயர்களைத் தீர்மானிக்கட்டும்) பெயர்கூறி கற்பித்த எல்லாப் பொருட்களையும் ஒரு பெட்டியில் இடுங்கள். நீங்கள் பொருட்களின் பெயரைச் சொன்னதும் குழுவிலுள்ள ஒருவர் வந்து அதனை பெட்டியிலிருந்து எடுத்தல் வேண்டும். குறித்த பொருளை எடுத்தவர் அதனை வகுப்பிலுள்ள அனைவருக்கும் உயர்த்திக் காட்டிவிட்டு மீண்டும் பெட்டியில் இடவேண்டும். அவரால் குறித்த பெயருக்குரிய பொருளைக் கண்டு பிடிக்க முடியாதவிடத்து அல்லது பிழையானதை எடுத்தால் எதிரணியிலிருந்து ஒருவர் கண்டுபிடிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அவர்வெற்றி பெற்றால் அவரது குழுவுக்கு புள்ளியை வழங்க வேண்டும். பொருள்களின் பெயர்களை அறிமுகம் செய்து, மனதில் பதிப்பதற்கு இது உகந்த விளையாட்டாகும்.

## (2) பேச்சுத் திறனுக்கான விளையாட்டு

### (அ) அவதானிப்பு விளையாட்டு

**'கிம்ஸ்' விளையாட்டு**–பெயர்கள் கற்பிக்கப்பட்ட பொருட்களிலிருந்து அரை டசின் அல்லது அதற்கதிகமாக எடுத்து அவற்றை ஒரு மேசையில் அல்லது தரையில் வைத்துவிட்டு ஒரு துணியால் மூடிவிடவும். பின்பு அரை நிமிடத்துக்கு இரண்டு குழுவினரும் நன்றாகப் பார்க்கும் படியாக திறந்துவைத்து விட்டு பொருட்களை மூடி விடவும். பின்பு குழுவிலுள்ள ஒவ்வொருவரும் அங்கு வைக்கப்பட்ட பொருட்களின் பெயர்களைக் கூறும்படி செய்யவும். முடியுமானால் முன்னர் கற்பித்தபடி அதனை சிறுவாக்கியத்தில் வைத்துக்கூறும்படியும் செய்யலாம். ஒரு பொருளின் பெயரை ஒரு முறைதான் கூறவேண்டும். ஒரு பொருளைப் பெயரிட்டுக்கூற மாறி மாறி ஒவ்வொரு குழுவினருக்கும் சந்தர்ப்பம் வழங்கலாம். குழுவினர் இவ்விளையாட்டுக்குப் பழக்கப்பட்டதும் பொருட்களின் எண்ணிக்கையை அதிகரித்து விட்டு அவர்களுக்குத் தரப்படும் நேரத்தைக் குறைக்கலாம். இடைநிலை வகுப்புகளில் பெயர் கூறப்படும் பொருளைப்பற்றி மேலும்

நூலகம் கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல்களைக் கூறும்படி தூண்டலாம். இத்தரத்திலுள்ளவர்கள் ஒரு பேனாவை "பேனா" என்று பெயரிடுதல் சிரமமல்ல. ஆனால் சிவப்பு நிற, குமிழ்முனைப்பேனா என விபரம் கூறும்படி தூண்டலாம். சிறந்த விளக்கத்தைக் கூறுபவர்க்கு புள்ளி வழங்கி இவ்விளையாட்டை வெற்றிகரமாக நடத்தலாம்.

## (ஆ) விடுகதைகள்

ஒரு பொருளைப் பற்றிய சில தகவல்களை மட்டும் கொடுத்து குழுவினர் அப்பொருளை எதுவென ஊகிக்கச் செய்தலே இவ்விளையாட்டு ஆகும். உதாரணமாக "கைகள் உண்டு, கால்கள் இல்லை, முக முண்டு, தலையில்லை," என்று ஒரு பொருளைப்பற்றிக் கூறி குழுவினால் அப்பொருளை இந்தத் தகவல்களைக் கொண்டு ஊகித்தறிய முடியாதவிடத்து, மேலும் சில தகவல்களைக் கொடுக்கலாம். அதே போன்ற பொருள் ஒன்று எனது சட்டைப் பையிலும் உண்டு, அதில் இலக்கங்களும் உண்டு என்று கூறும்போது, குழுவினர் உடனே விடையைக் கூறக் கூடியதாக இருக்கலாம். இதே போல மாணவர் தாமே விடுகதைகளைத் தயாரிக்க ஊக்குவிக்கலாம்.

## (இ) கதை கூறுதல்-

கதையின் முதல் வாக்கியத்தை நீங்களே கூறி ஒவ்வொருவரையும் ஒவ்வொரு புது வாக்கியத்தைக் கூறிக் கதையைத் தொடரும்படி செய்தல். குழுவில் ஒருவரை செயலாளராக நியமித்து ஒவ்வொருவரும் கூறுகின்ற வாக்கியங்களை எழுதும்படி செய்தல்-இறுதி வாக்கியமும் சொல்லி முடிந்தவுடன் முழுவதையும் குழுவினருக்கு வாசித்துக் காட்டும்படி செய்தல். அதில் சிறந்தகதை எது எனத் தெரிந்து கொண்டு பாராட்டுகளை வழங்கல்.

## (ஈ) சுயசரிதை : விளையாட்டு

குழுவினர்க்குத் தெரிந்த புகழ்பெற்ற ஒரு பெரியாரைப்பற்றி அல்லது அவரது தொழிலைப்பற்றிய வினாக்களை குழுவினர் கேட்கவேண்டும். கரும் பலகையில் விபரங்களை எழுதிவிடல் வேண்டும். கற்போர் அதனையொட்டிய வினாக்களை ஒவ்வொருவராகக் கேட்டு அறிதல்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணம் "அவர் எப்போது பிறந்தார்?" இப்போது என்ன செய்கின்றார்? போன்ற வினாக்களைக் கேட்கலாம்.

## (3) வாசிப்பதற்கான விளையாட்டுக்கள்

**(அ) ஊகித்தல் விளையாட்டு**–அட்டைகளைப்பொருத்துதல்–

குறித்த அட்டைகளை வகுப்பில் உள்ளோருக்குக் கொடுத்து அவற்றின் பிரதிகளை அறையினுள் சுற்றிவர தொங்கவிடுங்கள். கற்போர் தமக்கு கொடுக்கப்பட்ட அட்டைகளைச் சுவரில் உள்ள அட்டைகளுடன் பொருத்துதல் வேண்டும்.

**(ஆ) சொல்லைச் சொல்லுதல்**– சொல் அல்லது சொற்கூட்டங்கள் அடங்கிய அட்டையை ஒவ்வொருவருக்கும் கொடுங்கள். வகுப்பிலுள்ளோரை இரு குழுக்களாகப் பிரியுங்கள். உங்கள் சைகைகளுக்கமைய ஒவ்வொருவரும் தமது எதிரணியிலுள்ளோருக்கு குறித்த நேரத்தில் உங்கள் கட்டுப்பாட்டுக்கமைய தமது அட்டைகளைக் காட்டல் வேண்டும். இந்த நேரத்திற்குள் எதிரிலுள்ளோர் அந்த அட்டையை வாசித்தல் வேண்டும்.

## கிரகித்தலுக்கான விளையாட்டு

**(இ) கிரகித்தல் விளையாட்டு- கடை விளையாட்டு**

3 அல்லது 4 கடைகளுக்குரியதாக பொருட்கள் சிலவற்றை வகைப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்பொருட்களின் பெயர்கள் அடங்கிய சொல் அட்டைகளைக் கலந்து ஒவ்வொரு குழுவினருக்கும், ஒவ்வொரு சொல் அட்டைக் கட்டுக்களைக் கொடுக்க வேண்டும். எந்தக்குழு முதலில் அட்டைகளை கடைகளுக்கு ஏற்ற பொருள் அடிப்படையில் சரியாக வகைப்படுத்துகின்றதோ அக்குழுவே விளையாட்டில் வெற்றிபெற்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (4) எழுத்துத் திறன்பற்றிய விளையாட்டு-

### (அ) எழுத்துக்கூட்டுதல் விளையாட்டுக்கள்:

குறுக்கெழுத்துப் போட்டிகள் வெவ்வேறு மட்டத்திலான மொழி கற்றலுக்கேற்ப, வெவ்வேறு விதமான குறுக்கெழுத்துப்போட்டிகளை விசேடமாகத் தயாரித்து வழங்குதல்,

### (ஆ) மாயாவித்தைக்காரனின் விளையாட்டுக்கள்

ஒரு சொல்லைக் கொடுத்து அதில் ஒரு எழுத்தை மட்டும் மாற்றுவதன் மூலமாக அதை வேறொரு சொல்லாக மாற்றுகின்ற விளையாட்டை மாணர்களுக்குப் பயிற்றுவித்தல்.

உதாரணம்-

1. யானை, பூனை, பானை
2, ஆடு, மாடு, வீடு, காடு
3. மந்திரம், தந்திரம், இயந்திரம்

எழுத்தறிவில்லாத ஆரம்ப வகுப்பு மாணவர்க்கு எழுத்தறிவையூட்ட இவ்விளையாட்டுச் சிறந்தது, எனினும் கடினமான சொற்களைக் கொடுப்பதன் மூலம் இடைநிலை வகுப்புகளுக்கும் இதை ஏற்றதாக அமைக்கலாம்.

பல்வேறு மொழி கற்பித்தல் எண்ணக் கருக்களுக்கேற்ப, இது போன்ற வேறு பல விளையாட்டுக்களையும் ஆசிரியர்கள் சுயமாக ஆக்கிக் கொள்ளலாம். அவை மொழி கற்பித்தலுக்கு மிகுந்த துணை புரியுமென்பதில் சற்றேனும் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# உலகோருள்ளே உந்துவிசையின் உத்வேகங்கள்

(Motivation Strategies)

(வீரகேசரி வாரவெளியீட்டில் பிரசுரமானது)

## சமூக உணர்வினாலும் உத்வேகங்கள் கருக் கொள்கின்றன.

உலகில் வாழும் மக்கள் யாவரும் ஏதோ ஒரு விதத்தில் காலத்துக்குக் காலம் உந்து விசைக்குட்பட்டவர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளனர். இவ்விசையற்றவர்கள் அல்லது குறைந்தவர்கள் வாழ்வில் அதிக வெற்றியை ஈட்டுவதில்லை, வாழ்வில் புகழோடு வாழ்வதில்லை.

இந்த உந்து விசையானது மானிட வாழ்வில் மூன்று விதத்தில் உருப்பெறுகிறது. அவையாவன:-

1, பயத்தின் மூலம் உண்டாகும் உந்துவிசை

2. வெகுமதியின் பயனாக ஏற்படும் உந்து விசை

3. தானாகவே ஏற்படும் உந்துவிசை என்பனவாகும்.

**பயத்தின் மூலம்** உண்டாகும் உந்துவிசை என்னும் போது இது மருட்டல், பயம் அல்லது தண்டனை காரணங்களால் உருவாவது. வேலையைச் செய்யாமல் விடில் இழப்பு ஏற்படும் ஏன்னும் எண்ணக்கருவின் பயனாக உந்தப்படுதல், இதைத் தொழிற்சாலையில் வேலைபார்த்த ஒரு தொழிலாளியின் நிகழ்ச்சியில் இருந்து விளக்கலாம். "தொழிற்சாலையில் எவ்வளவு காலம் வேலை செய்தீர்?" என அவரிடம் கேட்டபோது வேலை செய்யாதவிடத்துச் சுடப்படுவீர்" என்று சொல்லி வெருட்டுமளவும் தான் பயத்தின் பயனாக வேலை செய்ததாகக் கூறினார். இவனை வேலை செய்ய வைத்தது, அவனில் ஏற்படுத்தப்பட்ட பயம். பயப்படுத்தப்படாத விடத்து அவன் வேலை செய்திருக்கமாட்டான். ஒரு வேளை, வேலையில் அமர்ந்திருக்கவும் மாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெகுமதியின் பயனாக** ஏற்படும் உந்துவிசையை இரண்டாவதாக எடுத்துக் கொண்டால் ஒரு தொழிலில் அக்கறை ஊட்டும் செயல்பாடு மூலம் இது ஏற்படுவது. பொறுப்பை ஒப்படைக்கும் போதும், முன்னேற்றத்துக்கான சந்தர்ப்பங்களையளிக்கும் போதும், அங்கீகாரம் அளிக்கும் போதும் உண்டாவது. இது வாக்குறுதி, வெகுமதி, சலுகைகள், சம்பளம் முதலியவற்றை வழங்குவதால் ஏற்படும் உந்து விசையாகும். ஒன்றை எதிர்பார்த்து நிற்கும் உந்து விசை இதுவாகும்.

சலுகைகள் கூடக்கூட இது மேல் நோக்கிச் செல்லும் தன்மையுடையது. சலுகைகள் குறைவுறும் பொழுது, அல்லது இல்லாதவிடத்து நின்றுவிடலாம். இது ஒரு பிராணிக்கு ஆகாரத்தை ஊட்டும் வண்ணம், தடியின் மேல் கட்டிய குழைக்கு அல்லது வைக்கோலுக்கு ஒப்பானது. உணவை உண்ண விரும்பும் பிராணி தெண்டித்து, முயற்சி மூலம் தனது உணவைப் பெற்று உண்ணும் காட்சி போன்றது. முயற்சி கூடக்கூட ஆகாரத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு மேலோங்கிச் செல்வதை நாம் அவதானிக்கலாம்.

மூன்றாவதாக **தானாகவே ஏற்படும் உந்துவிசை.** இவ்வகை உந்துவிசை உள்ளத்தினுள்ளிருந்து உற்பத்தியாகிறது. இயற்கையாகவே அவ்வழகின் பேறாக ஒன்றைச் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் காரணமாக ஏற்படும் உந்துவிசை இதுவாகும். இதைப் படிமுறைக் கற்றலினால் வளர்த்து எடுக்கலாம். இவ்வுந்து விசை ஏற்பட வேறுபல காரணங்களும் உள. வாழ்வில் நிறைவு, இரம்மியம், அழகியல் நிறைவு, குதூகலச் சம்பவங்கள் காரணமாக மனதில் தானாகவே ஏற்படுவது. இது அன்பு தெய்வீகம் காரணமாகத் தன்னை மறந்து, பிறருக்காகத் தன்னை அர்ப்பணம் செய்யும் விசை– வாழ்க்கை. மனிதாபிமானத்தின் மேன்மையான நிலைப்பாட்டில் இவ்வுந்துவிசை உருவாகும். வெகுமதிக்காகவோ மற்றும் அங்கீகாரத்திற்காகவோ அல்லாமல், தம்மை மானிட வர்க்கத்துக்கு அர்ப்பணம் செய்யும் எண்ணக்கருவில் உருவாகி, செயல்பாட்டில் மானிட வர்க்கத்தை ஒன்றிணைப்பது. இதுவே எல்லாவிதமான உந்து விசைகளிலும் உன்னதமானதும், உலகுக்கு (உண்மையை) ஒளியை வெளிக்காட்டும் சக்தி மிக்கதாகவும் அமைகிறது. இப்படியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்துவிசையைக் கொண்டவர்கள் வாழ்வில் தோல்வியைக் காண்பதேயில்லை. வெற்றிக் கொடியைத் தங்கள் கையில் பிடித்தபடியே காணப்படுவர். "மனிதனுக்குச் செய்யும் சேவை தெய்வத்துக்குச் செய்யும் சேவை" என்னும் கோட்பாடு கொண்ட உந்துவிசை இதுவாகும்.

மக்கள் மற்றவர்களுக்கு உதவும் மனப்பான்மை கொண்ட உள்ளம் படைத்தவர்களாக இருந்தால், தானாகவே விழையும் உந்துவிசை மனதில் ஏற்படும். தங்களிடம் உள்ள தாலந்துகளை–கொடைகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் விருப்பங்காரணமாக இது மனிதரில் தோன்றலாம். வாழ்வில் தமக்குப் பாதுகாப்பை உண்டாக்குமுகமாக, வாழ்வில் ஒரு நோக்கை, விளக்கத்தை, ஒரு முக்கியத்துவத்தை உணரும் வண்ணமாக இது அனேகருக்குள் தோன்றுகிறது. மனிதன் ஒரு சமூகப் பிராணி. ஆகவே தான், சமூகத்துடன், நாட்டுடன், சூழலுடன் பங்காளியாவதற்கு உதவியாகத் தான் அமைய வேண்டும் என்னும் எண்ணக்கருவில், இது சிலருக்குள் உண்டாகின்றது.

மனிதன் மானம், மரியாதையாக வாழ வேண்டப்படுகிறான். மானத்தோடு, மகிமையோடு வாழவேண்டும் என்னும் வாழ்க்கை வாழ அழைக்கப் பட்டுள்ளான். ஆகவே உறுதிப்பாட்டில் இது சிலருக்குள் ஏற்படுகின்றது. மானிடன் அந்நியோன்ய வாழ்க்கை வாழ அழைக்கப்பட்டுள்ளான். ஆகவே மற்றவர்களோடு பழகி, மற்றவர்களுக்குப் பிரயோசனம் மிக்கவராக, தேவை மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்னும் உறுதிப்பாட்டில் இது சில மனிதரில் ஏற்படுகிறது. மனிதன் ஒரு புதுமை விரும்பி. ஆகவே புதிய வேலைகளை–காரியங்களை அறிய விரும்பும் வண்ணம், இவ்வுந்துவிசை சிலரில் பிறக்கிறது. மனிதன் தனிமையாக வாழவிரும்பாதவன். ஆகவே அவன் தனது தனிமையை இல்லாமற் செய்து தனது ஓய்வு வேளைகளைப் பிரயோசனப்படுத்தும் முகமாக இந்த உந்துவிசை தானாகவே ஏற்படுகிறது. சமூகத்துடன் வாழும் மனிதன் சமூகத்திடம் பல நன்மைகளைப் பெற்றுக்கொள்கிறான். ஆகவே அதைச் சமூகத்தோடு பகிர்ந்து கொள்ளல் வேண்டும் என்னும் சமூக உணர்ச்சி காரணமாகவும் மனிதனிடம் இந்த உந்துவிசை ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டமைந்த, பிறப்பு, சூழல், படிமுறைப்படிப்பு மூலம் பெற்ற மேற்காணும் காரணிகளைக் கொண்டு எழுந்த ஆர்வமூட்டும் உந்துவிசைகளை, மூன்று பெரும் பிரிவுகளுக்குள் அடக்கலாம். இம் மூன்று வகைகளும் ஒவ்வொருவரிலும் ஓரளவு இருந்த போதிலும், ஒரு சிலரில் ஒரு வகை மிகவும் கூடுதலாகவே காணப்படும்.

**முதலாவது வகை, சாதனையை (பலாபலன்களை) எதிர்பார்த்து ஏற்படும் உந்துவிசை.** இப்படிப்பட்டவர்கள் தங்களில் காணப்படும் அதீத திறமைகளை– தாலந்துகளை முன்னேற்றுவதிலும், தமது ஆள் தத்துவத்தை வெளிக்காட்டுவதிலும் விருப்புடையவராக இருப்பர். செய்யும் வேலையை மிகத்திறம்படச் செய்ய, நல்ல நோக்கு–இலக்குகளை ஏற்படுத்தி, சில வேளைகளில் கஷ்டங்கள், நஷ்டங்கள் ஏற்பட்டாலும் சகிக்க ஆயத்தமாக இருப்பர். பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, நல்ல முடிவுகளைப் பெறத் தக்கதாக வேலைகளில் ஈடுபடுவர். இவர்கள் நவீனத்துவத்தை விரும்பு பவர்களாக, சரியானதைச் செய்யும் வரை குழம்பிய நிலையில் இருப்பர். தனது செயல்பாடு வெற்றி பெற்றுள்ளதா என அடிக்கடி மதிப்பீடு செய்து பிழைகளைத் திருத்தி முன்னோக்கிச் செல்வர்.

**அடுத்தவகை பலத்தை-அதிகாரத்தை எதிர்பார்த்து ஏற்படும் உந்துவிசையாகும்.** இந்த விதமான உந்துவிசையைக் கொண்டவர்கள் தங்கள் செயல்பாடு மற்றவரில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் நோக்குடனே செயல்படுவர். இப்படிப்பட்டவர்கள் தங்கள் கௌரவம் மதிப்பைப் பெரியதாகக் கணிப்பர். சில வேளை இவர்களின் புத்திமதி வேண்டாதவிடத்தும் மற்றவர்களுக்கு புத்தி கூறுவர். தனது கருத்துகள் மற்றவர்களின் கருத்துடன் இணைந்து கலந்து ஒரு பொதுமைப்பாட்டை, மாற்றத்தை அடையச் செய்ய வேண்டுமென எதிர்பார்ப்பர். இவர்கள் பேச்சாளர்களாகவும் இருப்பர். சில வேளைகளில் விவாதத்திலும் ஈடுபடுவர். இவர்கள் மிகவும் கடினமானவர்கள். வெளியாகப் பேசுபவர்கள். அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாக இருப்பர். எதற்கும் பயப்படமாட்டார்கள். சிலர் தங்கள் தாலந்துகளையிட்டுப் பெருமை கொண்டவர்களாகவும் இருக்கலாம். இதையடக்கித், தம்மைச் சமப்படுத்துவதற்கு தெய்வீகத்தை நாடி நிற்பர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூன்றாவது வகை தொடர்பை விரும்பி, எதிர் பார்த்து ஏற்படும் உந்துவிசையாகும்.** எல்லோரிடையேயும் மிகவும் உபயோகமிக்க அந்நியோன்யம் ஏற்பட வேண்டும் என்னும் நோக்கோடு, இத்தொடர்பு உந்துவிசை அமையும். தன்னை மற்றவர்கள் விரும்ப வேண்டும். தனது கருத்துகளை ஏற்றுக் கொள்ளவேண்டும், நல்ல சினேகம் ஏற்பட வேண்டும், என்னும் நல்லெண்ணத்துடன் இது தோன்றும். மற்றவர்களுக்குத் தான் எப்படி உதவலாம்? அவர்களைத் தேற்றலாம்? என்னும் நற்பண்புகள் கொண்டதாக இந்தத் தொடர்பு உந்துவிசை அமையும். இது சினேகமனப்பான்மை கொண்ட உந்துவிசையென அழைக்கப்படலாம். சிநேகத்தை, நட்பை, அன்பை விரும்பி உற்பத்தியாகும் இவ்வுந்துவிசை, மக்களை அறிந்து அவர்களுக்கேற்ப சேவையாற்றுவதற்கு, அவர்களிடம் சேவையைப் பெறுவதற்கு அவர்களை நல்ல வழியில் நடத்துவதற்கு இந்த உந்து விசை பற்றிய அறிவு மிகவும் உபயோகம் மிக்கது.

முக்கியமாக மக்களை ஆளும், வழி நடத்தும், வழி காட்டும் அரசாங்க, அரசாங்க சார்பற்ற ஸ்தாபனங்களில் கடமையாற்றும் தலைவர்கள் இத்தன்மைகளைப் பற்றிக் கூடுதலாக அறிந்திருப்பது மிகவும் அவசியம். தலைமைப்பீடம், முகாமைத்துவம் என்பன மக்கள் மனதை மயக்கி, மருட்டி, ஆசைவார்த்தை காட்டிப் பெறும் பதவிகள் அன்று. மக்களின் மனதைத் தொட்டு மக்களின் ஏகோபித்த விருப்பத்தின் பேரில் செம்மையான வாழ்க்கை வாழ்ந்து பெறும் உயர்ச்சி பீடமாக இது அமைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

# ஒரு தொடர்பியலாளர்– உந்துவிசையாளரில் காணப்படவேண்டிய பண்புகள்

(Qualities of a Communicator)

(இ.ஒ.ப.கூட்டுத்தாபன முகாமைத்துவ கருத்தரங்கில் வழங்கப்பட்ட கருத்துக்கள்)

## ஒரு தொடர்பியலாளரின் தொடர்பின் இலக்கு என்ன?

இவரின் முக்கிய இலக்கு (Goal) தொடர்புகொள்பவரை உந்து சக்திக்கு உட்படுத்தச் செய்தல். திட்டமிட்டபடி, நோக்கத்துக்கு அமைய, விரும்பிய முடிவுகளை எடுக்க மக்களைச் செயல்படச் செய்தல், மனங்களை மாற்றுதல், பராமரித்தல், தொடர்பில் ஓர் ஐக்கியத்தை நிலைநாட்டி ஒரு நல்ல சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உறுதுணை புரிதல் எனலாம். இதைப் பெற அவரிடம் கீழ்க்காணும் நல்ல பண்புகள் மிக மிக அவசியம்.

## தொடர்பியலாளரிடம் இருக்கவேண்டிய நல்ல பண்புகள்

1. அறிவைப் பெருக்க, ஆற்றலை, தேர்ச்சித்திறத்தினை, விருத்தி செய்ய முயற்சியெடுப்பவர்.
2. அக்கறையுள்ளவர், நம்பவைக்கக்கூடியவர்.
3. உறுதியான நம்பிக்கையும், மன உறுதிப்பாடும் கொண்டவர்.
4. சுறுசுறுப்பும் விழிப்புணர்வும் உள்ளவர்.
5. இணைப்பாளர், தெளிவான பேச்சாளர், செயல்முறை சார்ந்தவர்.
6. நெகிழ்வுத்திறன் கொண்டவர்; பல்திறப் புலமை வாய்ந்த அணுகுமுறை மிக்கவர்.
7. உண்மையுள்ளவர்.
8. மனமகிழ்வளிப்பவர் ; பண்பாளர்.
9. சாமர்த்தியமும் பொறுமையும் உள்ளவர். எதையும் ஆவலுடன் கேட்பவர்.
10. தனது குறைகளை உணர்பவர்.
11. மற்றவர்களின் குறைநிறைகளை உணர்ந்து; பாராட்டுபவர்.
12. பிழைகளை ஏற்று, திருந்தும் சுபாவமுள்ளவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சுவாரஷ்யமான பேச்சும் நட்புறவும் கொண்டவர்.
14. ஆற்றலையும், அனுபவங்களையும் பகிர்ந்து கொள்பவர்
15. எதிலும் நலமே காண்பவர்.

## தொடர்பியலாளர் தவிர்க்க வேண்டிய பண்புகள்

1. எல்லாம் தெரிந்தவர் என்ற மனப்பாங்கு கொண்டவர்.
2. ஜதார்த்தமாக அறிந்து கொள்ளாதவர். ஜதார்த்தமாக அறிந்து கொள்ள வசதிகள் அற்றவர்.
3. வேண்டாவெறுப்பும் சந்தேகமும் உள்ளவர்.
4. சிக்கலான கருத்தினால் சமநிலையற்றவர்.
5. வேலை செய்ய மனதில்லாத, மந்தமான குழப்பமான நடைமுறை சார்ந்தவர்.
6. மாற்றமற்ற, ஊக்கமற்ற அணுகுமுறையுடையவர்.
7. சாக்குப்போக்கு கூறுபவர்.
8. செப்பமற்றவர், வெளிவேஷம் கொண்டவர்.
9. சீற்றமும், பதட்டமும் கொண்டவர், மற்றவர்கள் கருத்துகளைக் கேட்கமனதில்லாதவர்.
10. இறுமாப்புள்ளவர்.
11. ஆற்றல்களை அசட்டை செய்து மற்றவர்களின் குறைகளைக் குறித்துக் கேலி செய்பவர்.
12. ஒன்றிலும் பிழைவிடமாட்டேன் என்ற மனநிலையும், எதையும் பூசி மறைக்கும் தன்மையும் கொண்டவர்.
13. கடுகடுப்பும்–வசைபாடும் பாங்கும் உடையவர்.
14. தன்னலம் மிக்கவர், பகிர்ந்து அனுபவிக்க விருப்பமற்றவர்.
15. தோல்வி மனப்பான்மையாளர்.

## வலுமிக்க தொடர்பாடல் எப்போது நிகழ்கிறது?

ஒரு நோக்கத்தை நிறைவேற்றும்பொருட்டு, சரியான மனிதன், சரியான காரியத்தைச் சரியானவருக்கு, சரியான இடத்தில், சரியான நேரத்தில், சரியான விதத்தில் கேட்கும் படியாகக் கூறும்போது அல்லது வாசிக்கும் போது அதைக் கேட்டவர் விளங்கிக் கொண்டு நோக்கத்தில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் பயனைத் தரும்போதுதான் வலுமிக்க தொடர்பாடல் நிகழ்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# ஒலியின் விநோதங்கள்

## (Wonders of the Sound)

(தேசிய கல்வி நிறுவகத்தில் நடத்தப்பட்ட செயலமர்வில் வழங்கியது)

❖ வௌவால்கள் தமது இரையைத் தேடிக்கண்டுபிடிக்க எப்படி ஒலியைப் பிரயோசனப்படுத்துகின்றன? - **எதிர் ஒலி மூலம்.**

❖ பெரிய திமிங்கில மீன்கள் தமது உணவைத்தேடிப் பெற எவ்வாறாக ஒலியைப் பாவிக்கின்றன? **எதிர் ஒலி மூலம்.**

❖ குருடர்கள் பொருட்களை உணர்ந்து அறிய எவ்வாறு ஒலியைப் பாவிக்கின்றனர்? **மிகவும் நுண்ணிய கிரகித்தல் மூலம்.**

❖ கப்பல்கள் தமக்கு எதிரிகளாக இருக்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கண்டு கொண்டு விலகிச் செல்ல ஒலியை எவ்வாறு பாவிக்கின்றன? **எதிர் ஒலி சோனார் மூலம்.**

❖ கடலின் அடியில் மீன்கள் வாழுகின்றனவா என்பதை அளவிடப் பாவிக்கும் கருவி என்ன? **எதிர் ஒலி சோனார் (Sonar Echo Sounder)**

❖ பூமியில் ஏற்படும் பூகம்பங்கள், அதில் உண்டாகும் எரிபொருட்களைக் கண்டு பிடிக்கப் பாவிக்கப்படும் எதிரொலிக் கருவியாது?. **'செய்ஸ்மோகிராவ்' (Seismogragh)**

❖ குற்றவாளிகள் (Criminals) எவ்வாறு ஒலியின் மூலம் பிடிபட்டுக் கொள்கிறார்கள்? **அவர்களின் குரலைக் கொண்ட பேச்சை ஒரு ஒலிப்பதிவு நாடாமூலம் பதிவு செய்து, அதைப் பேச்சு Spectrogram முக்குள் செலுத்துவதன் மூலம்.** (ஒளியைப் பிரித்துப் பரிசோதிக்கும் கருவி மூலம் Spectrogram)

இதனால் அன்றோ திருவள்ளுவர்:-

**'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் - அச் செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை'** - (திருக்குறள்- கேள்வி 411) என ஒலியின் - செவிச் செல்வத்தின் மேன்மையை மேலாகக் கருதி இப்படியாகப் பாடியுள்ளார்.

"Wealth (gained) by the ear is wealth of wealth,
that wealth is the chief of all wealth."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# ஒலி மூலம் மொழி

ஒலி மொழியைத்தோற்றுவிக்கிறது. ஒலி எழுத்து, சொல், வசனங்களாக மாறுகிறது. பேசும் மொழி கீழ்க்காணும் ஒலி வடிவில் எமது காதை வந்தடைகின்றது. அவையாவன:-

1. **மனப்பாங்கு, மனநிலை** (Mood- Temperament)
2. **இழையமைப்பு (பின்னல்)** (Texture)
3. **குரல் உயர்வு, தாழ்வு** (Intonation)
4. **அழுத்தம், வலியுறுத்துதல்** (Stress)
5. **நடைவேகம் - செல்லும் வேக அளவு** (Pacing)
6. **விரைவு, விரைவு வீதம்** (Speed)
7. **அசை அழுத்தம், உச்சரிப்பு, அழுத்தம் கொடுத்தல்** (Accent.)
8. **தொனி, குரலோசை** (Tone- Voice)

இப்படியான உருவங்கள் வித்தியாசமான செயல்பாடுகளுள் பிரவேசித்து மொழியென நாமம் பெற்று, பேச, விளங்கிக் கொள்ளத் துணைபுரிகிறதை அறிந்து கொள்ளலாம்.

அடுத்து எமது (குரல்-சத்தம்) எங்கிருந்து வருகின்றது என்று பார்ப்போம்.

சத்தம் தொண்டைக்குள்ளால் வருகிறது. தொண்டையின் பின்புறத்தில் ஒரு குழாய் போன்று குரல்வளை (Larynx) காணப்படுகிறது. இதற்குள் இரு மென் சவ்வுகள் (Membranes) காணப்படுகின்றன. அவை அதிர்வு நாளங்கள். (Vocal Cords) காற்றானது இவ்வதிர்வு நாளங்கள் வழியாக உள்ளேயும் வெளியேயும் செல்லும்போது நாளங்கள் அதிர்வுறுகின்றன. இவ்வதிர்வே (Vibration) சத்தத்தை ஏற்படுத்துகிறது. இவ்வதிர்வு நாண்களே (Cords) நாம் பாடும் போது இன்னிசையாக- பண்திறம் மிக்க ஒலியாக சத்தத்தை மாற்றி வெளிவருகிறது.

நாண்கள் விறைப்பானதாக, - நெகிழ்வற்றதாக மாற, மாற சுருதி மேலோங்குகிறது. (The tauter the cord, the higher the pitch)

"நீலகண்டம்"- ஒரு மனிதன் முதிர்ச்சி அடையும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரல்வளையின் ஒரு பகுதி திட்டிபோல் பெரிதாகிறது. இதை ஆங்கிலத்தில் – Mans' Adam's appple" "ஆதாமின் அப்பிள்" என அழைப்பர்.

**தடங்கலின்றிப் பேசுவதற்குப் பேனாவும் பேனா பிடிப்போரும்**

(Pen & Person for better speaking)

P-E-R-S-O-N

P- Persuasive - . தூண்டுதல், கவர்ச்சியுடைய, மெய்ப்பிக்கவல்ல

E- Enthusiastic- பற்றார்வலர், உணர்ச்சியார்வம், விறுவிறுப்புள்ள


R- Reliable - நம்பத்தக்க, நிலையுடைய, நல்லொழுக்கம் வாய்ந்த, மாறா ஒப்பியையுமிக்க

S- Sincere - உள்ளார்ந்த, மனமார்ந்த, உண்மையான, நாணயமான, வாய்மை தவறாத, நேர்மை வாய்ந்த

O-Orderly - ஒழுங்குமுறைப்பட்ட, விதிமுறை, கட்டுப்பாடுகளை மதித்து நடக்கின்ற

N-Nimble - விரைவான, விரைவில் புரிந்து கொள்ளக்கூடிய, சுறுசுறுப்பான.

விளக்கப்படம் (Diagram:)




**P-E-N**

P - Poise - சமநிலை

E - Ease - இன்னலம், நெகிழ்வுறு

N - Naturalness - இயல்பாக, இயற்கையாக

மேற்காணும் தகவல்களை ஊன்றி அவதானிப்போமானால் பேனை பிடிப்போரால், பெறக்கூடிய ஆகக்கூடிய பயனை அறிந்து கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# ஒரு அறிவிப்பாளரின் பண்புகள்
## (The Role of an Announcer)

(இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பயிற்சி நிலையத்தில் நடாத்தப்பட்ட அறிவிப்பாளர் செயலமர்வில் வழங்கப்பட்டது.)

ஒரு அறிவிப்பாளர் ஒரு தொடர்பியலாளர் ஆவார். தொடர்பாடல் என்பது ஆங்கிலத்தில் Communication. இச் சொல் 'கொம்மியூனிகியர்' ('Communicare') என்னும் இலத்தீன் சொல்லிலிருந்து வந்த பதமாகும். 'கொம்யூனிகியர்' என்பது பொதுமைப்படுத்தல், பகிர்ந்துகொள்ளல், வெளிப்படுத்தல், அலைவழித்தொடர்பு (To transmit) எனப்பொருள்படும்.

தொடர்பாடல் என்பது வெறும் பேச்சையோ, கலந்துரையாடலையோ, சிலவற்றைக் கேட்டலையோ அல்லது உரையாடுவதையோ அல்லது வெறும் கருத்துக்களையோ உணர்வுகளையோ மட்டும் கருதாது– ஒன்றுபடுத்தல் (communion) அதாவது கருத்துக்களை அல்லது உணர்வுகளைப் பகிர்ந்து 'ஒன்றுபடுதல்' –ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தல் என்பதையே குறிக்கும். ஆகவே ஒரு தொடர்பியலாளர்–

1. அறிவிப்பாளர் தனது விடயதானத்தை, மொழியை நன்கு அறிந்திருக்க வேண்டும். (Shoud know his language & subject)
2. வானொலி நுட்பங்களை அறிந்திருக்க வேண்டும். (Technique)
3. அவரது நேயர்களை நன்கு அறிந்தவராக, புரிந்தவராக இருக்க வேண்டும். (Know his audience)
4. பொறுப்பு வாய்ந்தவராக இருக்க வேண்டும்.

அறிவிப்பாளரின் கடமைகள் சந்தர்ப்பம், சூழ்நிலைக்கேற்ப வித்தியாசப்படலாம். அவரின் கடமைகளுக்கேற்ப அவரின் தொழிலுக்கேற்ப இவற்றை வகைப்படுத்தலாம். அவையாவன:–

1. நிகழ்ச்சி அறிவிப்பாளர்
2. தொடர்கலையக அறிவிப்பாளர் (Continuity Announcer)
3. செய்தி அறிவிப்பாளர்
4. விளம்பர அறிவிப்பாளர் (வர்த்தக சேவைக்கு உரியவர்)
5. சிறுதுணுக்கு அறிவிப்பாளர் (Spot)
6. பேச்சுக்களை வழங்கும் அறிவிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. மரண அறிவித்தல்களை வாசிக்கும் அறிவிப்பாளர்
8. விமர்சனங்களை வழங்கும் அறிவிப்பாளர்
9. பேட்டிகாணும் அறிவிப்பாளர்
10. கலையக ஆசிரியர்கள் (அறிவிப்பாளர்)
11. இசைநிகழ்ச்சி அறிவிப்பாளர்
12. மற்றும் கலை நிகழ்ச்சிகளைத் தொகுத்து அளிக்கும் அறிவிப்பாளர் ஆகியோர்.

## அறிவிப்பாளரில் காணப்படவேண்டிய திறமைகள்

1. இவர் ஒரு நடிகராக இருக்க வேண்டும்.
2. கிளர்ச்சியூட்டும் பேச்சாளராக இருப்பது விரும்பத்தக்கது.
3. இசை வல்லுனராக அல்லது குறைந்தது இசைப்பிரியராக இருக்க வேண்டும்.
4. பக்க சார்பற்றவராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.
5. எழுத்துமூலமான குற்றத்தாக்கு, அவதூறான குற்றச்சாட்டுகள் பற்றிய சட்டங்களை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.
6. பரந்த அறிவுள்ளவராக... பலதுறைப்பட்ட அறிவு இருத்தல் வேண்டும்.
7. விரைவில் ஊகித்து அறியக்கூடியவரான தகைமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
8. மக்கள் மேல் பிரீதி உள்ளவராக இருக்க வேண்டும்
9 நடப்புச் செய்திகளை, நாளாந்த புதினங்களை அறிந்தவராக இருக்க வேண்டும்.
10. கூர்மதியுள்ள, சாதுரியப்பேச்சு மிக்கவராக அமைதல் வேண்டும். (wise & witty)
11. அன்பான, நல்லிசைவான, ஆதரவானவராக இருத்தல் வேண்டும். (General)
12. பண்பார்ந்த, கனிவான, மதிப்பு வாய்ந்தவராக இருத்தல் வேண்டும் (Gentle)
13. உச்சரிப்பில் வல்லுனராக இருத்தல் வேண்டும்.
14. தொனித்திரிபு மிக்கவராக இருத்தல் வேண்டும். (Inflation)
15. புறத்தூண்டுதல் இல்லாமலே தானாக இயங்கும் தன்மை கொண்டவராக அமைதல் வேண்டும். (spontaneous)
16. நேரத்தை நேர்த்தியாகப் பிரயோசனப்படுத்தத்தக்கவராக இருக்க வேண்டும்.– பேச்சுத் துரிதம் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட போதைப் பொருட்கள்.

(Eighteen types of drugs)

(SLFI நிறுவகத்தினால் நடத்தப்பட்ட 'போதைப்பொருள் தடை என்னும் கருத்தரங்கில் வழங்கிய கருத்துக்கள்)

1. மர்யுனா/ ஹஸிஸ்/ கனபிஸ்–கஞ்சா - Marjuna/Hashish/Canabis
2. 'இன்ஹலன்ஸ்'– உள்வாங்கி - Inhalants
3. அமில, புரில் நைரயிற்ஸ்–வேத வெறியப்படி மூலப்பொருள். - Amy & Butyl Nitrites[ch]
4 ஹெலுசினோயென்ஸ்–வேதி உப்பீனி - Hallucinogens
5. எல்.எஸ்.டீ - L.S.D.
6. பீ.சீ.பீ - PCP[ch]
7. கொக்கேயின்/ அம்பிரேயின்ஸ்– கிளர்ச்சியூட்டும் இலை. - Cocaine
8. 'கிறக்' - "Crack" [g]
9 வேறு கொக்கேயின் வகைகள்/ உணர்ச்சியூட்டச் செய்யும் மருந்துவகை. - Other Cocaine[c]
10. `ஹிரோயின் / ஒபியம் – அபின் - Heroin (Opium)
11. வேறும் 'ஒப்பிஏற்ஸ்' –மற்றும் அபினுடன் கலந்ததூக்க மருந்து. - Other Opiates[e]
12. 'ஸ்ரியூமுயூலன்ஸ்'–கிளர்ச்சியூட்டி - Stimulants
13. 'செடரீவ்ஸ்'–நோவாற்றும் மருந்து - Sedatives[e]
14. பாபிரிறேற்ஸ்–தூக்கமருந்தாகப் பயன்படும் வெள்ளை உருப்பளிக்குவில்லை. - Barbiturates[e]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. 'மெதகுவலோன் - Methaqualone[e]

16. 'இறங்குவலஸ்ஸர்ஸ்' – Tranquilizer[e]
நோவகற்றும் மருந்து

17. 'அல்ககோல்'– ஈதில் – Alcohol
மதுசாரம்

18. சிகரட்/ புகையிலை. - Cigarettes.

## அவற்றுள் மிகவும் பிரபல்யமான நாலு போதைப் பொருட்கள்:

**1. கஞ்சா:** இது கனபிஸ், மர்ஜுனா, ஹஸ்விஸ் என்னும் மறுபெயர்களினால் அழைக்கப்படுகிறது. இது 'ஹம்' என்னும் ஒரு இந்திய தாவரத்தில் இருந்து பெறப்படுகின்றது. இதில் காணும் இரசாயனச்சாரம், மனிதனின் (உளத்தை) மனப்பாங்கை, புலன் உணர்வுகளை, எண்ணக்கருக்களை, உணர்ச்சிகளை வித்தியாசப்படுத்த உதவுகிறது. இதைப் புகைக்கும்போது 2000க்கு மேற்பட்ட தீய இரசாயனச் சேர்க்கை உடம்பில் சென்று சோர்வுணர்சியையும், மாயக் காட்சிகளையும் (மருட்சி), திசை குழப்பத்தையும் (திசைதெரியாத் தன்மையையும்) சித்தப்பிரமையையும், மனக்குழப்பத்தையும், தற்கொலை செய்ய ஆர்வத்தையும் உண்டு பண்ணும். கஞ்சாவை வைத்திருப்பது குற்றச் செயலாகும்.

**2) ஹிரோயின்:** இது அபினில் இருந்து பெறப்படுகிறது. அபின் பொப்பியென்னும் தாவரத்திலிருந்து பெறப்படுகிறது. இது மயக்கமருந்தாக – போதைப்பொருளாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அபினைப் பாவிப்பது புருஷத்துவத்தைச் சிதைவுறச் செய்து, உடம்பைப் படிப்படியாகப் படுமோசம் ஆக்குகிறது. ஆகக் கூடுதலாகப் பாவிக்கப்பட்டால் நீண்ட மயக்கத்தையும், மரணத்தையும் கொண்டு சேர்க்கும். இதை வைத்திருப்பது குற்றச் செயலாகும். இதைக் கடத்திச் செல்வது தூக்குத் தண்டனைக்குரிய குற்றமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3) அல்ககோல்:** மதுசாரம்- வெறிக்குடிவகை. ஈதில் அல்ககோல் மரக்கறிவகைகளை இயற்கையாக நொதியச் செய்து பெறப்படும் இரசாயனச் செயற்கையாகும். இது எமது உடலினுள்ள இயற்பொருளாக, உணவுச்சத்து உயிர்ச்சத்தாகவும், உயிர்ச்சத்து மீண்டும் இயற்பொருளாகவும் மாறுபடும். உயிர்ப்பொருள், மாறுபாட்டுக் காரணியாக அமைந்துள்ளது. உணவு சாதாரணமாக ஜீரணமாகும் விதத்தை அல்ககோல் மாறுபடச் செய்வதனால் இதுவும் ஒரு போதைவஸ்து எனக் கணிக்கப்படலாம். இதை அதிகம் உட்கொண்டால் நஞ்சியல்பை அடையும். இதை அதிகம் அருந்துதல் உடம்பில் உள்ள அணுக்கள், உறுப்புக்களைச் சேதப்படுத்தி மிகவும் கூடிய வெறியை ஏற்படுத்த ஏதுவாக அமையும்.

**4) புகையிலை:** ஒருவர் புகையிலைப் புகையை உட்கொள்ளும் போது 'பில்லியன்' கணக்காக மிகவும் நுண்ணிய பகுதிகளைக் கொண்ட 1200க்கு மேற்பட்ட இரசாயனச் சேர்க்கையை உட்கொள்ளுகிறார். இயற்கையில் இவையொன்றும் தேகசுகத்துக்கு உகந்தனவல்ல. அமெரிக்க தேசிய போதைப்பொருள் நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளர் டொக்டர் வில்லியம் போலினின் கருத்துப்படி Nicotine- 'நிகோடின்' புகையிலையிலிருந்து வடித்திறக்கப்படும் எண்ணெய் நச்சுச்சத்துக் கொண்டது. ஆகவே இதுவும் ஒரு போதைவஸ்து (மயக்கமருந்து) எனக்கூறுகிறார். சிகரட்டில் காணும் வடித்திறக்கப்படும் எண்ணெய் (addictive) கூட்டப்படுகிற சத்துக் காரணமாகவே அனேகர் இதைப் பாவிக்கின்றனர். அபின் சத்தைப் போன்று, இதுவும் ஒரு மயக்க நிலையை அளிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# போதைப்பொருள் தடைபற்றிய விளக்கம்

( Prevention of Drugs)

**போதைப்பொருள்**– இது ஒரு மயக்கப்பொருள்.

**போதைப்பொருள் தடை** என்பது, பின்னர் நடைபெற இருப்பதைத் தவிர்ப்பதற்கு முன்னரே, தயாராக இருக்க அறிந்து கொள்ளல் ஆகும்.

**தவிர்த்துக் கொள்ளல்** (prevention) என்பது–

1. தனிநபர்களை போதைவஸ்துக்களை உட்கொள்ளாவண்ணம் விளங்க வைத்தல்.

2. இதுவரை பாவித்தவர்களை அதற்கு அடிமையாகா வண்ணம் இருக்கச் செய்தல்.

3. இதைக் கைவிட்டுப் புதிய சீவியத்துக்குக் கொண்டு வருதல்.

## போதைப்பொருள் பாவனையாளர்களின் (தன்மை) மட்டம்

1. ஆரம்பநிலையில் உள்ளவர்கள்.

2. நடுத்தரத்தானவர்கள்.

3. உயர்தரத்தானவர்கள்.

## ஆரம்பநிலையில் உள்ளவர்களின் தடை

❖ ஒவ்வொருவரும் இதற்கு ஆளாகலாம் என்னும் அபாயம்.

❖ பொதுசனத்தின் உடல், உள சௌகரியத்தை முன்னேற்றுதல்.

❖ தனிநபர், குடும்ப, சமூக ஐக்கியத்தை நோக்கல் என்பன.

## இலக்குகள்

❖ பொதுசனத்தை இவ்வபாயத்திலிருந்து நீக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பாவனையைக் குறைத்தல்.
- போதைவஸ்தில் உள்ள ஆர்வத்தை இல்லாமற் செய்தல்.
- இவ்வபாயத்திலிருந்து வாலிபர்களை வென்றெடுத்தல்.

## நடுத்தரத்தினருக்கான தடை

- பாவனையில் உள்ளவர்களைத் தெரிந்தெடுத்து அவர்கள் அதற்கு அடிமையாகாவண்ணம் செய்தல்.
- ஏன் இவர்கள் இதைக் கையாளுகிறார்கள் என அளந்து அறிதல்.
- இதனால் ஏற்படும் தீமைகளைக் கண்டறிதல்.
- நோயாளர்களைப் பராமரிக்கும் திட்டமொன்றை அமைத்தல்.
- நோயாளர்கள் சிகிச்சை பெற ஊக்குவித்தல்.

## உயர்தரத்தினர் தடை:

- புனருத்தாரண நடவடிக்கைகளைக் கைக்கொள்ளல்.
- போதைப்பொருள் பாவனையைத் தடைசெய்யும் ஸ்தாபனங்களைக் கண்டுபிடித்து அவர்கள் மூலம் சிகிச்சை உதவிகளைப் பெறல்.
- குடும்பங்கள், பாடசாலைகள், வேலைசெய்யும் இடங்கள், சமூகத் தினருக்கிடையில் புனருத்தாரண வேலைகளை ஆக்கிக் கொள்ளல்.



போத நிலையம் கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

# போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதில் தொடர்புசாதனங்களின் பங்கு

( Prevention of Drugs through Mass Media)

1. போதைப்பொருள் பாவனை பெருகாவண்ணம், நாட்டில் ஏற்படும் கெடுதிகளை எடுத்து விளக்கும் காவலனாக வெகுசனத்தொடர்பு சாதனம்.

2. அறநெறி நின்று அறிவெல்லைக்கோட்டை அக்கறையுடன் பெருப்பிக்கும் சாதனமாக வெகுசனத்தொடர்பு சாதனம்.

3. போதைப்பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புனர்வாழ்வளித்து, அவர்களில் மேலும் கவனத்தை ஈர்த்து, அவர்களின் வாழ்வை ஒளிமயமாக்கும் பொருட்டு வெகுசனத்தொடர்பு சாதனம்.

4 போதைப்பொருள் பாவனை இல்லாமல் போகவேண்டும் என்னும் பேரார்வத்தை (நாட்டத்தை) உண்டாக்கும் காரணியாக (கருவியாக) வெகுசனத்தொடர்பு சாதனம்.

5. போதைப்பொருள் அற்ற புதிய பூமியை ஏற்படுத்தி அதனை அபிவிருத்தியடையச் செய்வது வெகுசனத்தொடர்பு சாதனம்.

6. போதைப்பொருளின் அழிவிற்கெதிராகப் புனர்வாழ்வளித்து, தீர்க்கமான தீர்மானங்களை எடுக்க உறுதுணையாக அமைவது வெகுசனத்தொடர்பு சாதனம்.

7. நாட்டு மக்கள் சமுதாயத்தில் அந்தஸ்தை (status) பெறக் கலந்தாய்வதற்குரியவராகக் கடமை புரிவது வெகுசனத்தொடர்பு சாதனம்.

8. போதைப்பொருள் சம்பந்தமாக முன்னேற்றமான கொள்கைகளைக் கலந்துரையாடி, அவற்றை நிலைநாட்டப் பிரயாசைப்படுவது வெகுசனத்தொடர்புசாதனம்.

9. எல்லா வயதினரிடையேயும் போதைப்பொருள் பாவனையற்ற பொதுவான ஓர் சமுதாய சீர்திருத்தத்தை ஏற்படுத்துவது வெகுசனத் தொடர்பு சாதனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கல்வி, விளையாட்டு, அரசியல், பொருளாதார, கலாசார நாட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் இதனை இல்லாமற் செய்யலாம்)

10. மக்களிடையே காணும் சிறந்த பல இரசனைகளையும் விரிவடையச் செய்து முன்னேற்ற உதவக்கூடியது வெகுசனத்தொடர்பு சாதனம். இப்படிச் செய்வதன் மூலம் மக்கள் கவனம் அழகியல் கலைகளில் ஈடுபடக்கூடியதாக அமைகிறது.

11. போதைப்பொருள் பாவனையைத் தடுக்கும் ஆசிரியனாகக் கடமை புரிந்து, போதனை புரியக்கூடியது வெகுசனத்தொடர்பு சாதனம். (அறிதல் ஆட்சி, எழுச்சி ஆட்சி, உள இயக்க ஆட்சி மூலம்)

12. சுருங்கக்கூறின் சமூக நிலைமையை உச்சநிலைக்கு மாற்றும் ஊடகமாக அமைந்து, ஒரு சிறந்த போதைப்பொருள் பாவனையற்ற, நவீன மேம்பாடான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப உறுதுணை புரிவது வெகுசனத்தொடர்பு சாதனம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

# ஊக்களழிச்சி உள்ளவரில் காணும் ஆறு இலட்சணங்கள்

**ஊக்கெழிச்சியுள்ள மக்கள் ஆக்க உணர்ச்சி மிக்க, சந்தர்ப்பங்களை நழுவ விடாது எல்லா வேளையும், எதற்கும் தயாராக உள்ளவர்கள்.**

(Enterprising personalities are those who create, take opportunities and men of readiness)

(1) இவர்கள், நல்ல காரியங்களைத் தொடக்கி வைக்கும் தன்மை கொண்டவர்கள், இவர்கள் புதுமை விரும்பிகள், சிறந்த குத்தகைக்காரர்கள், தொழிற்துறை உரிமையாளர்கள், அமைப்பாளர்கள், எந்தச்செயலையும் துணிகரமாகச் செய்து முடிப்பவர்கள். (Display initiative)

(2) இவர்கள், தீர்மானங்களை உடனுக்குடன் எடுக்கும் தகுதிவாய்ந்தவர்கள், ஒன்றையும் பிற்போடுவது கிடையாது. நாளை, பின்னர் என ஒத்திவையாது அன்றன்றுள்ள காரியங்களை அவ்வப்பொழுதே செய்து முடிப்பவர்கள். (Make decisions)

(3) இவர்கள், கடவுள் தங்களுக்குக் கொடுத்த தாலந்துகளைப் பிரயோசனப்படுத்தி, மனிதனின் முன்னேற்றத்துக்கு என அவற்றை அர்ப்பணம் (தியாகம்) செய்பவர். (Manages the resources)

(4) ஊக்கம், ஆக்கத்தை வெளிக்காட்டுபவர், தூண்டுதல்பேறு கொண்டவர். மனஉறுதிப்பாடு(பண்பு) கொண்ட உள்ள அமைப்புள்ளவர். (Display drive & determination for the service)

(5) தங்கள் சீவியத்தின் மூலம் மற்றவரைக் கவர்பவர். தங்கள் ஜீவியத்தை மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக அமைத்து அதை ஒரு மாதிரித்தன்மையாக்கி, மற்றவர்கள் கண்டு அதன்படி நடக்க உந்தப்படும் ஜீவியத்தை வாழ்பவர். (Influence others by their own models)

(6) செம்மறியாடுகள் போல் பின்னோக்கிப் பார்க்காமல் மேய்ந்து கொண்டு செல்லாமல், தாம் செய்யும் வேலைகளை தாம் பெற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுகூலங்களை அலசி ஆராய்ந்து பின்னோக்கிப் பார்த்து, அதன் நன்மை தீமைகளை அளந்து அறிந்து, மேலும் மேலும் முன்நோக்கிச் செல்பவர்கள். எதிலும் வெற்றி காண்பவர்கள். (Monitor progress, frequently for betterment & progress)

- **திருக்குறள் நூலின் பிரகாரம்:**
  'தோன்றிற் புகமொடு தோன்றுக- அஃதிலார் தோன்றலின்
  தோன்றாமை நன்று'.
- **ஷேக்ஸ்பியரின் கூற்றுப்படி (Shakespeare)**, "Some are born great, greatness is thrust on a few, and some achieve greatness."

இவர்கள் இருவரின் தத்துவங்களுக்கு மேற்பட்ட ஒரு தத்துவத்தை நீங்கள் ஊக்கெழிற்சியுள்ளவரில் காணக்கூடியதாக இருப்பதை உணர்வீர்கள் ஆயின், இதுவே உங்கள் வாழ்க்கையை நிர்ணயிக்கும். கடவுள் தந்த ஊக்கத்தை உபயோகித்து உலகில் உன்னத வாழ்க்கையை அடைய இவ்வறிவு உங்களுக்கு உதவுவதாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

# பேருரையாற்றத் தேவையான தத்துவங்கள்

(Basics for public addressing)

1. **தோற்றம்:** (Appearance) நெகிழ்வுறு நிலையில்– ஆறுதலளிப்பவராக இருந்தாரா?. வேறும் தடங்கல், தடைகள், மன உணர்வு காணப்பட்டதா?, தொடர்பாடலில் ஒற்றுமைப்பாடு (ஐக்கியம்) தோற்றத்தின் ஆரம்பத்திலேயே உண்டானதா?

2. **நிற்கும் நிலை:** (Stance) நிமிர்ந்து, சமநிலையில், மிகவும் மன உறுதியுடன் காணப்பட்டாரா?

3. **அறிமுகம்:** (Introduction) அவதானத்தை ஈர்த்ததா?

4. **முகத்தோற்றம்/பாவம்:** (Facial expression) அங்கு நிற்பதற்கு மகிழ்ச்சியாகக் காணப்பட்டாரா? செய்திக்கு ஏற்ற முறையில் முகபாவங்கள் இருந்தனவா?

5. **கண்தொடர்பு (கண் இணைப்பு):** (Eye contact) பற்றிணைப்பு உண்டு பண்ணுதல் இருந்ததா?. கேட்போரை மையமாக வைத்து பேச்சாளர் பேருரை செய்தாரா?

6. **பொருளடக்கம்** (Content) **:** ஆர்வம் ஊட்டக்கூடியதாக, நல்ல மனப்பான்மை கொண்டதாக கவர்ச்சியானதாக, தனிப்பற்றானதாக இருந்ததா?

7. **கூட்டமைப்பு** (Structure)**:** அமைப்பு முறை: நன்கு அமைக்கப்பட்டதா? இலேசாகக் கிரகிக்கக்கூடியவாறு இருந்ததா? அமைப்பு முறை நாடக ரூபமாக அமைந்து இருந்ததா?

8. **குரல்** (Voice) **:** தெளிவாகக் கேட்கக்கூடியவாறு அமைந்ததா? குரல் ஏற்ற இறக்கத்தில் உணர்ச்சியோடும், உயிர்த்தன்மையோடும் பேசினாரா?

9. **சைகை** (Gestures) **:** மெய்ப்பாட்டசைவு: பேருரைக்குத் துணையாக இது அமைந்ததா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. **மொழி (பேச்சு)** (Language): தெளிவாக அடக்கமாக, (இலகுவாக), எளிய நடையில் – இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியதாக அமைந்ததா?

11. **இறுதி/முடிவு** (Ending): விறுவிறுப்பாக வலிமை மிக்கதாக (ஞாபகமூட்டக்கூடியதாக) நினைவூட்டக்கூடியதாக அமைந்ததா?

12. **எல்லாவற்றிலும் மேலானது** (Most important): இறுதிவரை கேட்போர் அவதானம் செலுத்தினார்களா? என்பதே.

(ஆகவே ஆரம்பம் தொடக்கம் இறுதிவரை – மேற்கூறிய தத்துவங்களுடன் சேர்த்து:

கூர்மையாக/சுறுசுறுப்பாக. – திட்டவட்டமாக,தெளிவானதாக (Specific)

– அளக்கக்கூடியதாக (Measurable)

– எய்தற்பேறு கொண்டதாக

– முயன்றுஅடையக்கூடியதாக (Achievable)

– மெய்யியல்பு சார்ந்த (Realistic)

– நேரத்துக்குட்பட்டதாக (Time bound)

உங்கள் பேருரையை அமைத்துக் கொள்வீர்களாயின் நல்ல பெறுபேறுகளைப் பெறுவீர்கள்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

# நவீன நூலை ஆக்கி எடுக்க மரபுவழிவந்த உத்திகள்

(Traditional component of a modern book)

மேலுறைச் சித்திரம் (Cover art) கண்டவுடன் கவரும் தன்மை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

'பகுதி. 'ஏ' **பொதுவான பிரிவு** (General division)

(1) **நூலின்முற்பக்கம்**–புத்தக மேலுறை–முன்விளிம்பு: (Dust (Front of the book) jacket) இதில் புத்தகம் அல்லது ஆசிரியர் பற்றிய சுருக்கம் இடம் பெறும்.

(2) **நூலின் பிற்பக்கம்.**–பின் விளிம்பு (Blurb)புத்தகம் பற்றிய (Back of the book) அல்லது வெளியீட்டாளர், பாராட்டு விரிவுரை (நூலாசிரியர் பற்றியது) இதில் இடம் பெறலாம்.

'பகுதி 'பீ' **(1) நூலின் முற்பக்கம்** (Front of the book)

1. நூலின் மேலுறை, (The dust jacket)
2. முன்விளிம்பு (Front flab)
   புத்தகம் பற்றிய விளக்கவுரை
3. பின்விளிம்பு (Back flab) –நூலாசிரியர் பற்றிய குறிப்பு
4. மேலுறைச் சித்திரம் (Cover art)–
   பத்து விதமானது –புகைப்படம், விளக்கப்படம் என்பன.

**விளக்கம் : இருவித மேலுறைகள்:–**

பேப்பர் மேலுறை, மட்டை மேலுறை

5. அரைப்பக்க மட்டத்தில் தலைப்பு.
   (Half title)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. முழுப்பக்கத் தலைப்பு (Full title)– ஆசிரியர் பெயர், உபதலைப்பு, தராதரம் என்பன.
7. நன்றி நவிலல், ஆதாரம் என்பன (Acknowledgement)
8. அர்ப்பணம். (Dedication)
9. பதிப்புரிமை (Copywrite description) விளக்கம்
10. அச்சகம் பற்றிய விளக்கம் (Details of printing)
11. வெளியீடு பற்றிய தகவல்கள் (Publication details)
12. முன்னுரை பாயிரம் – (Preface)
13. அறிமுகம் (Introduction)– இவ்வாராய்ச்சி ஏன்? என்ற விளக்கத்துடன் இருக்க வேண்டும்.
14. பொருளடக்கம் (Contents)
15. முன்துண்டு– (Frontispiece) புகைப்படம், அல்லது விளக்கப்படம்.
16. முகப்புரை (Preamble) தோற்றுவாய் – சுமூகமான நிலைப்பாட்டை ஏற்படுத்தவல்லது.

**புத்தக உள்ளடக்கம்**

நூலின் பகுதிகள் (Book itself)

17. (அ) அத்தியாயங்கள் – விடயதானம்
(ஆ) அப்பியாசங்கள் –
(இ) குறிப்புகள்
(ஈ) விளக்கக் குறிப்புகள் (Foot notes)

**(2) நூலின் பிற்பக்கம் (Back of the book):**

18. அனுபந்தம்– (Appendix) மேலும் விளக்கம் அளிக்க வசதியாக அமைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. அத்தியாயம் பற்றிய குறிப்புகள் (Chapters)
20. துணைநூல் அட்டவணை ( Bibliography)

தனிநபர்

நூல்கள்

பிரசுரங்கள் என்பன.

21. பொருளடக்க அட்டவணை (Index)

(1) பொது, (2) பெயர்கள் என்பன.

22. பின்னணியுரை, வெளியீட்டாளர், பொறிப்புச் சின்னம் (Colophon). நூல் ஆசிரியர் பெயர்- நூல் எப்படியாக எழுதப்பட்டது; நூல் எழுதி முடித்த திகதி என்பன இதில் குறிப்பிடப்படலாம்.
23. பிரசுரக் குறிப்புகள் (Printing notes- errates)- பிழைதிருத்தங்கள் என்பன.
24. பின்பக்க உறை, (Back cover) ஆசிரியரின் புகைப்படம் அல்லது அவரின் மேற்கோள்கள் இதில் பொறிக்கப்படலாம்.

**குறிப்பு:**

நூல்விளிம்பு முனைப்பு என்பது (Spine of the book) புத்தகத்தின் முதுகெலும்பு.

ஆசிரியர் - நூலின் விலை என்பன இப் புத்தக முனைப்பிலும் இடம் பெறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(18)

# தொடர்பியல் துறையில் அபிவிருத்தி

Development in communication

## மொழி தோன்றுமுன் தொடர்பு எப்படி நிகழ்ந்தது?

ஆதிமனிதன் மொழி தோன்று முன் உடலசைவுகள், ஒலி, சீழ்க்கை, கூவியழைத்தல், புகையெழுப்புதல், பறையடித்தல், மணியடித்தல், தீயம்புகளை வானத்தில் எறிதல் போன்றவற்றின் வழியாகத் தன்னைச் சுற்றியுள்ள வட்டார மக்களுக்குத் தேவையான செய்திகளை அனுப்பினான்.

ஆபிரிக்க காடுகளில் நீக்குரோக்கள், மக்களிடையே முரசறைந்து, அக் குறிப்பினாலே பல மைல் தூரத்திலிருக்கும் தம் இனத்தவர்களுக்கு செய்தி அனுப்பினர். அமெரிக்க நாட்டு மக்களிடையே புகை, நெருப்பு ஆகியவற்றை மூட்டி செய்தி அனுப்பும் முறையிருந்து வந்துள்ளது. பறை அடித்தல் தமிழகத்தில் இருந்துள்ளது.

மொழி தோன்றுவதற்கு முன், உடலசைவுகள் மூலமும் ஆதி மக்கள் தொடர்பு கொண்டிருந்தனர். ஊமைகள் சைகைகள் மூலம் இன்றும் தொடர்பு கொள்கின்றனர்.

உடலசைவு என்றால் வெகு அண்மையில் தன்னைக் காண்பவர்களுக்கு மாத்திரம் – தொலைவில் இருப்பவர்க்கு ஒலி மூலம் தான் செய்தி அனுப்ப முடியும். ஆகவே மக்கள் சீழ்க்கை ஒலி, கூவியழைத்தல், மணியடித்தல், பறையடித்தல், முரசறைதல், மற்றும் தீயம்புகளையும் பாவித்தனர். – இன்றும் கலங்கரை விளக்கம் போன்றவையும் தொடர்பு சாதனங்களாக அமைகின்றன.

**வாய்மொழி:-** மனிதன் எப்படிப் பேசத் தொடங்கினான் என்பதை மொழி வல்லுனர்கள் இன்னும் சரியாகக் கண்டுபிடிக்கவில்லை.

மொழி வந்தபிறகு தூதர்கள், ஒற்றர்கள் வழியாக மன்னர்கள் செய்திகளை அனுப்பினர்.

எழுத்துத் தோன்றுவதற்கு முன் ஓவியங்கள்– கி.மு. 3000இல் சுமேரியர் முதன் முதலாக படவரைவு மூலம் செய்தி சொன்னார்கள். தொடர்புக்காக ஓவியம், சுவரோவியம், மரப்பலகை, துணி, பறவைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்பட்டன. புறாக்கள், பின்னர் நடை, குதிரை கப்பல் மூலம் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

இன்றும் ஒரிஸ்ஸா மாநிலத்தில் – 940 கிளிகள் கடிதங்கள் கொண்டு செல்கின்றனவாம். ஒரிஸ்ஸாவில் தேர்தல் காலத்தில் தகவல் தொடர்புக்கு புறாக்களும் பயன்படுத்தப்படுகின்றனவாம். நவீன தொடர்பு சாதனங்கள் பயன்படுத்த முடியாத இடங்களில் இப்பொழுதும் இவை பயன்படுத்தப்படுகின்றன.

**மறுமலர்ச்சிக் காலம்**

**அச்சு**

கி.பி.. 1300 முதல், 1600 வரை ஐரோப்பாக் கண்டம் முழுவதும் அறிவு வளர்ச்சி பரவியது. இதன் காரணமாக நூல்களின் தேவை அதிகரித்தது. John Gutenberg என்னும் ஜெர்மனியர்– கி.பி. 1399இல் பிறந்தார். இவர் வணிகராகவும், பொற்கொல்லராகவும் இருந்தார். இவர் கி.பி. 1430இல் திராட்சைப் பழச்சாறு பிழியப் பயன்படுத்திய கருவியிலிருந்து மர அச்சுப் பொறியை முதலில் கண்டு பிடித்தார். பின்னர் மரத்திற்குப் பதில் உலோகத்தையும், அச்சுப் படிமைக்குப் பதில் தனித்தனி எழுத்துக்களையும் உருவாக்கினார். இப்படியாகவே ஐரோப்பாவில் முதல் அச்சுக் கூடத்தை நிறுவினார். கையெழுத்துக் காலம் முடிந்து அச்சுக் காலம் உதயமாயிற்று. அதன் பின் அச்சுக்கலை சிறந்த தொடர்பு சாதனமாயிற்று. முதலில் விவிலியம் போன்ற சமய நூல்களே வெளியிடப்பட்டன.

கி.பி. 1600 இல் அச்சுக்கலை வாணிபத்திற்குப் பயன்படுத்தப்படத் தொடங்கியது. இங்கிலாந்தில் வில்லியம் சாக்ஸ்டர் என்பவர் அச்சகம் ஒன்றை நிறுவினார். இவர் 90 நூல்களை வெளியிட்டார். 20 நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

உலகின் முதற் பத்திரிகை 1605இல் ஒஸ்ரியாவில் (Austria) வெளியாகியது.

கி.பி. 1811 இல் Freed Ringoing என்பவர்– அச்சு இயந்திரத்தை இயக்க, நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தார். இதன் பயனாக பிரிட்டனில் முதற் பத்திரிகை Oxford Gazette, Daily தினப்பத்திரிகை ஒன்றும் வெளியானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Times கி.பி. 1785இல் தொடங்கப்பட்டது. இது உலகின் மிகச் சிறந்த நாளிதழாக மதிக்கப்படுகிறது.

கீழ்க்காணும் தகவல்கள் தொடர்பியல் துறையில் தொடர்ச்சியாக ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தியை விளக்கிக் காட்டுகிறது. மிக முக்கியமான பிரபல்யமான கண்டுபிடிப்புக்கள் மட்டுமே இங்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

| கண்டுபிடிப்பு– விபரம் | காலம் | கண்டுபிடித்தவர்/ உபயோகித்தவர் |
|---|---|---|
| ஒலி, சைகைகள் மூலம் Grunts & Gestures | கி.மு. 10,000 முன் ஊகிப்பு | |
| நூல்கள். | கி.மு. 10,000 ஆண்டளவில் | மொழி அபிவிருத்தியடைந்தது. |
| எழுத்து அபிவிருத்தியானது | கி.மு. 4,000 ஆண்டளவில் | மொசபத்தேமியாப் பள்ளத்தாக்கில் சித்திரம் |
| செய்திக்கடிதங்கள் பரிமாறல் | கி.மு. 500 ஆம் ஆண்டளவில் | உரோமாபுரியில் – சரித்திர நூல் |
| அரசாங்க தகவல்களை அறிவிக்க தினசரி வெளியீடுகள் | கி.மு. 60 ஆம் ஆண்டளவில் | ஜீ. யூலியஸ் சீசர் காலத்தில் |
| வீட்டுப் புறாக்களைக் கடிதங்களைக் கொண்டு செல்ல பாவித்தல். | கி.பி. 12ஆம் நூற்றாண்டளவில் | ஹெங்கிஸ்ஹான் |
| அச்சு இயந்திரம் கண்டுபிடிப்பு* | கி.பி. 15ஆம் நூற்றாண்டில் | ஜொஹனாஹூற்றன் பேர்க் – ஜேர்மனியர். |
| புதினப் பத்திரிகை தொடர்ந்து அச்சு இயந்திரம் மூலம் வெளியானது | கி.பி. 17ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் | ஜேர்மனி, ஒஸ்ரியா, நெதர்லாந்து, இத்தாலியில். |
| தந்திச்சேவை (ஒரு'வயர்' மூலம்) | கி.பி. 1844 மே, 24ஆந்திகதி | சாமுவேல் எவ். பீ, மோர்ஸ் யூ.எஸ்.ஏ. |
| தொலைபேசி – 'கேபிள்' மூலம் | கி.பி. 1876ஆம் ஆண்டு | டாக்டர் அலெக்சாண்டர் ஹிறகம் பெல் யூ.எஸ்.ஏ. |
| "ஹிறமபோன்" (Cylindrical record) | கி.பி 1877 | எடிசன் யூ.எஸ்.ஏ |
| "ஹிறமபோன்" (Flat record) | கி.பி 1887 | பேர்லீனர் யூ.எஸ்.ஏ |
| சினிமாப்படம் – ஊமைப்படம் | கி.பி. 1895 | லுமியர் சகோதரர்கள் ( Lumier Brothers)- |
| பதிவு நாடா இயந்திரம் (Tape recorder) | கி.பி. 1899 | பொல்சன்(Poulsen) டென்மார்க் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சினிமாப்படம் – பேசும்படம் | கி.பி 1923 | டீபொறஸ்ட் (De Forest) யூ.எஸ்.ஏ |
| கம்பியில்லாத் தந்தி | கி.பி 1896 | ஹலிலியோ மார்க்கோணி |
| தண்ணீர் கீழ் கேபிள் மூலம் | கி.பி.1866 | பீல்ட் என்பவரால் – யூ.எஸ்.ஏ |
| தொலைக்காட்சி (Black and White) | கி.பி 1926 | பேயிட் (Baird) - பெரிய பிரித்தானியா – (முதல் ஒளிபரப்பு) |
| வர்ணத்தொலைக்காட்சி Colour . T.V. | கி.பி 1954 | யூ.எஸ்.ஏ –(முதல் ஒளிபரப்பு) |
| வானொலி | கி.பி. 1896 | மார்க்கோனி – இத்தாலி (ரேடியோ வல்ஸ் மூலம் தொடர்பு கொண்டவர்) |
| | கி.பி. 1906 | பெஸ்ஸென்டென் (Fessenden) யூ.எஸ்.ஏ. முதலில் ஒலிபரப்புச் செய்தவர். |
| வானொலி ஒலிபரப்பு | கி.பி 1920 | டாக்டர்பிறாங் கொன்றட்– பிற்ஸ்பேக்கில் (வெஸ்ரிங்கவுஸில்) |
| வானொலி ஒலிபரப்பு மத்தியஅலை(M.W) | கி.பி 1923 | எச்.டீ.ஆர்னோல்ட் எல்.எஸ்.பின்சிட் |
| எவ்.எம்.(F.M) | கி.பி 1920 | எட்வின் எச் ஆம்ஸ்ரோங். |
| சிற்றலை (S.W) | – | எச். ஹேட்ஸ் |
| கணனி பற்றிய கணக்கியல் ரீதியான எண்ணக்கரு | கி.பி 1936 | ஏ.எம். ரூறிங் |
| இரான்சிஸ்டர் கண்டுபிடிப்பு– Diode Valve | கி.பி 1904 (1849–1955) | ஜோன் அம்புறோஸ் பிளெமிங்– ஆங்கிலேயர் |
| பீட்சார்த்தகரமான 'சற்றலயிட்' பாவனை | கி.பி 1960 | ஐக்கிய அமெரிக்கா |
| 'சற்றலயிட்' செய்மதிகள் மூலம் தொடர்பு | கி.பி 1965 | ஐக்கிய அமெரிக்கா |
| Early Bird – என்ற முதல் செய்மதி வாணிபத்துக்காக இயங்க ஆரம்பித்தது. | கி.பி. 1965.04.06 | |
| 'இன்டர்நெட்' தொடர்பு – | கி.பி 1985 | ஐ. அமெரிக்கா பாதுகாப்பு அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டது. |

*1969 இல் ஐ.அ.வில் இது சிறிதளவில் ஆரம்பமாகி 1985 இல் பூகோள ரீதியாக இயங்கி வருகிறது.*

குறிப்பு: * 1422 - 1491 வரை காலத்தில் ஆங்கில அச்சகர் வில்லியம் ஹக்ஸ்ரன் முதல் ஆங்கில அச்சகராக இருந்தார் எனவும் சரித்திர வரலாறு உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

# "ஜேனலிஸம்" என்றால் என்ன?

What is Journalism?

பிரெஞ்சுமொழியில் **Jounalism** என்ற சொல் "Journe" ஒருநாள் வேலை – தினமும் நடைபெறும் முயற்சிகளைக் குறிக்கும். அதேபோன்று இலத்தின் மொழியில் Journalism என்ற சொல் diurnalis – தினமும் நடைபெறும் சம்பவம் என்னும் கருத்தை வெளிக்கொணரும், journal என்பது தினமும் நடைபெறும் காரியங்களைக் குறிக்கும் ஏடு– தினக் குறிப்புப் புத்தகம். ஆகவே Journalism என்பது தினமும் நடைபெறும் நிகழ்ச்சிகளைப், புதினங்களை ஊடகங்களுக்கு எழுதும் தொழில் – பணி என வரைவிலக்கணம் கூறலாம். தமிழில் இதற்குரிய பொருத்தமான கிட்டிய கருத்தை விளங்க வைக்கும் சொல் **ஊடகங்களுக்கு எழுதும் தொழில்** – ஊடக எழுத்துத்துறை, அச்சு இலத்திரனியல் ஊடகங்களுக்கு எழுது– **ஊடகஇயல்** தொழில் என்பதாகும்.

Journalist என்பது ஊடகத்துக்கென எழுதுபவர், ஒரு புதினப் பத்திரிகையை நடத்துபவர், ஒரு சஞ்சிகையை நடத்திச் செல்பவர், தினமும் நடைபெறும் காரியங்களைக் குறித்து வைப்பவர் எனக் கருத்துக் கொடுக்கலாம். அதாவது **ஊடக இயலாளர்.**

ஊடகங்களோடு தொடர்புடைய சொல் **News** என்பது–புதினம். Newsக்கு French சொல் Novelle என்பது– Novelle என்பது News புதியது எனப்படும்.

**News** என்பது புதினம். பொதுவாகத் தினமும் நடக்கும் காரியங்கள் புதினம் அல்ல. நடக்கமுடியாத காரியம் ஒன்று நடைபெறும்போது அது புதினமாகிறது. உதாரணத்திற்கு, "ஒரு நாய் மனிதனைக் கடித்தது" எனக் கூறும்போது அது ஒருநடைபெற்ற ஒரு செயல், தகவலாக அமைகிறது. இது சாதாரண சம்பவம். "மனிதன் நாயைக் கடித்தான்" என்னும்போது இது நடைபெற முடியாத ஒரு செயல். ஆகவே இது புதினமாகிறது. இவ்விளக்கம் John Bogart என்பவரால் 1882இல் முதலில் கூறப்பட்டது. இதே விளக்கத்தை Chales A Danna - "நியூயோர்க் ரய்ம்ஸ்" பத்திரிகை ஆசிரியரும் ஏற்றுக் கொண்டார். இவ் விளக்கமே இன்றும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மக்கள் அறிய ஆவல்படுவது, அவர்கள் அறிய வேண்டியது, செய்தியாகும், என ஒரு பெரியார் செய்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கம் கொடுத்துள்ளார். வாசிப்போரை, கேட்போரை, பார்வையாளர்களை கவர்ந்து எடுக்கக்கூடிய முக்கிய தனிச் சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்ச்சி, அறிக்கை, அல்லது சம்பவமே புதுத்தகவல் அல்லது செய்தியென News என்னும் சொல்லுக்கு விளக்கம் கூற ஏற்றது. புதினம் தகவல்களைக் கொண்ட பத்திரிகைகள், நாளாந்த செய்திப் பத்திரிகைகள் என்னும் பெயரைப் பெறுகின்றன. புதினங்களை மட்டும் கொண்ட பத்திரிகைகளை புதினப்பத்திரிகைகள் என அழைக்கலாம்.

பென்ஜமின் டிஸ்றெயிலி– (Benjamin Disraeli) - என்னும் எழுத்தாளர் News என்னும் சொல்லுக்கு :–

| | | |
|---|---|---|
| N - North | : | வடக்கு |
| E - East | : | கிழக்கு |
| W - West | : | மேற்கு |
| S - South | : | தெற்கு |

இந்த நான்கு திசைகளிலும் இருந்துவரும் செய்தி– புதினம் என விளக்கம் தந்துள்ளார். ஒரு செய்தி ஒரு திசையில் இருந்து மட்டும் வந்தால், அது ஒரு வகுப்பினரின் – ஒரு பக்க சார்பான தகவல், புதினமல்ல எனக் கூறுகிறார். ஆகவே இவ் விளக்கம் நான்கு திசைகளிலும் இருந்து வரும் செய்திகளை ஆராய்ந்து உண்மை எனக் காண்பவற்றையே நம்பவேண்டும் என்னும் தெளிவை எமக்கு விரிவுபடுத்தி விளம்பரப்படுத்துகிறது. ஒரு புதினத்தைக் தொகுத்தெடுக்க, எவரால்? எதனை? எப்போது? எங்கே? எப்படி? (ஏன்?)– Who, what, when, where, Why (How) என்னும் சொற்பதங்களை வினாவாக வைத்துச் செய்திகளைத் திரட்ட வேண்டும். ஒரு செய்தியில் இக் கேள்விக்கான அம்சங்கள் யாவும் அடங்கியிருக்க வேண்டும். அப்பொழுதுதான் அச் செய்தி ஒருவரைச் சென்றடையும் போது, ஒரு தூண்டற்பேற்றை அவர் அடைவார். செய்தியை உடனடிச் செய்தி, (Spot), மஞ்சரிச் செய்தியெனக் கூறுபடுத்தலாம்.

**உடனடிச் செய்தி** – உடனுக்குடன் சுடச், சுடக் கொடுக்கப்பட வேண்டியது. இங்கே தகவல் மிகவும் சரியானதாக இருக்க வேண்டும். (Accurate) **மஞ்சரிச் செய்திகள்** நடைபெற்றுக் கொண்டிருக்கும், நடைபெற இருக்கும் காரியங்கள் குறித்தவையாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் பற்றி...



கொழும்பு உவெஸ்லிக் கல்லூரி, றோயல் கல்லூரி ஆகியவற்றில் ஒன்பது வருடகாலம் ஆசியராகத் தொழில்புரிந்து, அதன் பின்னர் "ரேடியோ சிலோன்", இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மும்மொழிகளையும் உள்ளடக்கிய கல்வி ஒலிபரப்புக் கலையில் 32 வருடங்கள் ஈடுபட்டு, அவற்றிலேயே சிந்தித்து, செயலாற்றி, தயாரிப்பாளர், அமைப்பாளர், கட்டுப்பாட்டாளர், பணிப்பாளர் என்னும் பதவிகளை வகித்துப் பணியாற்றியவர். 1994ஆம் ஆண்டு இவர் இலங்கை அரசாங்கத்தினால் **'தொடர்பியல் வித்தகர்'** என்னும் பட்டம் அளிக்கப்பட்டு, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். இக்காலங்களிலே இவர் இலங்கை தேசிய கல்வி நிறுவகத்திலும் தொடர்பூடக ஆலோசகராகக் கடமை புரிந்துள்ளார். இன்றும் தொடர்ந்து இப் பணிகளை மேற்கொள்ளுகிறார். இவற்றுடன் மெதடிஸ்த திருஅவையில் பிறப்புத் தொட்டு இன்றுவரை உறுப்பினராக இருந்து, தற்போது போதகராகக் கடமையாற்றிக் கொண்டிருப்பதன் மூலம் பெற்ற இறையியல் துறை அனுபவங்களையும், இந்நூல் பிரதிபலிக்கிறது.

இத்தகைய பதவியுயர்ச்சிகள் மூலமாக, அக்கால கட்டத்தில் பல சர்வதேச கல்வி நிகழ்ச்சிப் போட்டிகளில் பங்குபற்றி உலகப் பரிசில்களைப் பெற்ற பெரும்பகுதி அனுபவமும், அவுஸ்திரேலியா- 'ஏபீசீ', தென்கொரியா- 'கேபீஎஸ்', மலேசியா- 'ஏஐபீடீ', யப்பான்- 'என்எச்கே' ஆகிய பயிற்சிக் கழகங்களில் வானொலி, தொலைக்காட்சி ஆகிய ஊடகங்களில் பிரதி எழுதுதல், தயாரிப்பு, திட்டமிடல், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் பெற்ற பயிற்சியும் மற்றும் கல்விச் சுற்றுலாக்கள், SAARC- SAVE கருத்தரங்குகள் தொடர்பாக தென்னிந்தியா, வட இந்தியா, மாலைதீவு, நேபாளம் மற்றும் யப்பான், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், தைவான்,பீ.பீ.சி.இலண்டன் ஆகிய தேசங்களில் காணும் வானொலி நிலையங்களில் நடைபெறும் ஒலிபரப்பு, ஒளிபரப்பு நிருவாக முறைகளையும் பார்த்துத் தெரிந்து கொண்ட அனுபவமும் இக்கட்டுரைகள் வாயிலாக நேயர்களை வந்தடைகின்றன.

**ISBN 955 - 96225-3-6**

PRINTERS - WINNERS Hot Line 077- 322684

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org